1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele { grams: "CATHOLIC PRESS" JAFFNA. { phone: No. 100.

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

78-ம் புத்தகம் யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 12-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 44-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

நெடுநாள் மழைபெய்யாமையாலே நெற்பயிர்கள் வாடிக் கருகுகின்றன. மழைக்குப்பதில் வெயிலும், பனியும் மக்களை வாட்டிவருத்துகின்றன. புது மாதிரியான ஓர் இன்புளுவென்சாச் சளிசுரம் ஊருக்குள் தலைகாட்டி அதனால் வீடுகள்தோறும் தடிமன்காய்ச்சல், கடுஞ்சளியுடன்கூடிய விடாஇருமல்கண்டு அநேகர் வருந்துகின்றனர். இதனைக் "கோறிய இன்புளுவென்சா" என்று டக்ரர்மாருள் ஒருபாலார் கூறுகின்றனர்.

### பதில் வித்தியாதிபதி

வித்தியாதிபதியாகிய டக்றர் எச். டபிள்யு. ஹவுஸ்அவர்கள் இம்மாத இறுதியிலே தம்முடைய பதவியிலிருந்து விலகவிருக்கின்றார். அதனால் அவரிடமாக வருகிறமார்கழி 1-ந்திகதி தொடக்கம் பதில் வித்தியாதிபதியாகக் கடமைபார்க்குமாறு திரு. ரி. டி. ஜயசூரிய அவர்கள் நியமனஞ்செய்யப்பட்டிருக்கின்றார்.

### பதில் பிரதமநீத்யாசர்

பிரதம நீதியரசரான சேர்அலன் ரோஸ்அவர்கள் லீவிலேசெல்லுகின்றமையால் அவரிடமாகப் பிரதமஉபநீதியரசரான சங். செல்லப்பா நாகலிங்கம் அவர்கள் இம்மாதம் 15-ந் திகதிமுதல் பதில் பிரதமநீதியரசராகக் கடமை பார்க்குமாறு கவர்னர்—ஜெனறலாலே நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

### அதிகமான மிளகாய்ச்செய்கை

வடமத்திய மாகாணத்திலே மேலும் 5,000 ஏக்கர்நிலம் மிளகாய்ச் செய்கைக் குள்ளாயிருப்பதால் இலங்கையில் மிளகாய் உறபத்தி ஏறக்குறைய 20,000 அந்தரால் அதிகரிக்கவிருக்கின்றது. மிளகாய்தவிர சோளம், எள்ளு, குரக்கன், கடுகு ஆகியனவும் பெருந்தேசப்பரப்பிலே செய்கைபண்ணப்பட்டிருக்கின்றன.

### ஜேர்மன்பிரயாணக்கப்பல்கள்

ஐரோப்பாவிலிருந்து தூரகிழ்தேசங்களுக்குப் பிரயாணிகளை ஏற்றிஇறக்குவதில் இப்போது பிரான்சிய, இத்தாலிய, பிரித்தானிய பிரயாணக்கப்பல்களே மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன. தற்போது இருஜேர்மன் கப்பற்கம்பெனிகள் தங்கள் பிரயாணக்கப்பல்கள்மூலம் அவற்றுடன் போட்டியிட்டு முதன்மையடைய முன்வந்திருக்கின்றன. ஹம்பேர்க்-அமெரிக்கா, நோர்டெயூச்சர்-லோயிட் என்பனவே அவ்விருகம்பெனிகளுமாகும். இவ்விரண்டும் ஒன்றுசேர்ந்து அநேகபுதிய பிரயாணக்கப்பல்களை விரைவிலே பிரயாணத்துக்கு அமர்த்தவிருக்கின்றன. அக்கப்பல்களில் சுவாபென்ஸ்ரீன் எனும்கப்பல் வருகிறதைமாதம் தனது முதற்பிரயாணத்தை நடத்திக் கொழும்புகண்டு செல்லவிருக்கின்றது. அதனைத்தொடர்ந்து ஹம்பேர்க் என்ற கப்பலும், பிறகப்பல்களும் பிரயாணஞ் செய்யவிருக்கின்றன.

### புதிய செனற்றர்கள்

ஜனுப் ஏ. எம். ஏ. அசீஸ் அவர்களும, ஜனுப் குர்பான் ஹுசேன் அதமாலிஅவர்களும் செனற்சபை அங்கத்தவர்களாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றனர். இதற்குமுன் கவர்னர்—ஜெனறலாலே மூவரும், பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையின் அரசாங்ககட்சியினரால் நால்வரும், எதிர்க்கட்சியினரால் ஒருவரும் நியமனஞ் செய்யப்பெற்றும், தெரியப்பட்டுமிருக்கின்றார்கள்.

### அரிசிஇறக்குமதிசெய்யஅனுமதி

பிறநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதிசெய்வதை அரசாங்கம் 1941-ம் ஆண்டு தனதுஏகபோக உரிமையாக்கிக்கொண்டது. அதற்குப்பின் இப்போதுதான் முதன்முறையாக இலங்கையிலே வர்த்தகர்கள் மறுபடியும் அரிசியை இறக்குமதிசெய்வதற்கு அனுமதியளிக்க அது தீர்மானித்திருக்கிறது. ஆனால், அரிசிஇறக்குமதிசெய்யும் விஷயமாய் இந்தவர்த்தகர்களுக்கு அது ஓர்நிபந்தனையும் விதித்திருக்கிறது. அவர்கள் இறக்குமதிசெய்து சனங்களுக்குவழங்கும் அரிசியின்விலை பங்கீட்டரிசிக்கு (கூப்பன் அரிசிக்கு) புறம்பாக அரசாங்கம்விற்கும் அரிசியின்விலையைக் காட்டிலும் ஒருசதமாவது குறைவாயிருக்க வேண்டுமென்பதே. அந்த நிபந்தனையாகும். அரிசி இறக்குமதிசெய்ய வர்த்தகர்கள் அனுமதியளிக்கப்பட வேண்டுமெனப் பாராளுமன்றத்தில் செய்யப்பட்ட ஓர்வேண்டுகோளை மேற்கொண்டே அரசாங்கம் இவ்வாறுசெய்யத் தீர்மானிக்கலாயிற்று.

### காணிவல் சூதாட்டங்கள்

காணிவல் எனப்படும் களியாட்டகாட்சிகளிலே தம்போலா முதலாம் சூதாட்டங்கள் சென்ற 7-ந்திகதி சனிக்கிழமை இரவுமுதல் தடைசெய்யப்பட்டுள்ளன. இனிமேல் தனிப்பட்ட கிளப்புகளில்தான் அவைகள் அனுமதிக்கப்படும். பொலிசர் அன்றிரவுமுதல் களியாட்டகாட்சிகளிலே சகல சூதாட்டங்களையும், அதிர்ஷ்டம், யோகம் சம்பந்தமான பந்தயஆட்டங்களையும் முற்றாக விலக்கிவிட்டிருக்கின்றனர். "அதிகம் மிதமிஞ்சிய விதமாகக் காணிவல்கள் நடைபெறுகின்றன; அவற்றிலே பெரும் பாலானவைகள் முற்றுமே சூதாட்டதலங்களாய் இருக்கிறன" வென்று ஓர் பொலிஸ் அதிகாரி தெரிவித்திருக்கின்றார். அதனால் இனிமேல் பலபந்தய ஆட்டங்களையும், பொழுதுபோக்குகளையும் பொலிசர் விழிப்பாகக் கண்காணித்துக் கட்டளையை மீறுவார்மீது வழக்குத்தொடருவார்கள்.

### கரவெட்டிக் கொலைவழக்கு

கரவெட்டிவழக்கிலே மூன்றுபெண்கள்உட்பட ஐந்துபேரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றதாக அவ்வூர்வாசியான கந்தசாமியென அறியப்படும் டி. கனகசபைமீது தொடரப்பட்டிருந்த கொலைவழக்கு யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டிலே சங். ஜே. எச். வி. எஸ். ஜயவிக்கிரம நீதியரசரால் விசாரணைசெய்யப்பெற்று, எதிரி ஒரு குற்றத்தின்பேரில் மரணதண்டனையும், மற்றிருகுற்றங்களின்பேரில் பத்துவருடக் கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டனன்.

### இரண்டுறுத்தல் தங்கம்

களவிலே இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்படும் ஏறக்குறைய இரண்டுறுத்தலதங்கத்தைத் தலைமன்னார்றெயினில் பிரயாணஞ் செய்த ஓர் பிரயாணியிடமிருந்து மன்னார்சேகுத் தடைஉத்தியோகஸ்தர் திரு. வெஸ்லி செல்லையா சென்ற ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றலாயினர். அந்தறெயின் மன்னாரிலிருந்து புறப்பட்டபிறகு அதிலேஒருவர் தங்கம் கொண்டுபோவதாக அவருக்குத் தகவல்கிடைத்தது. உடனேஅவர் கார் ஒன்றில் மதவாச்சிக்குச்சென்று, றெயின் அங்குவந்துசேர்ந்ததும் அதைக் கைப்பற்றினார். இதுசம்பந்தமாய் மீரு சாகிப் எனும்ஒருவர் மன்னார் உதவி ஏசன்றரால் விசாரணைசெய்யப்படுகின்றார்.

### றெயின்கள் மோதுண்டன

காங்கேசன்துறை றெயில்வேஸ்றேஷனிலிருந்து 200 யார் தூரத்திலே சென்ற திங்கட்கிழமைகாலை 10-30 மணியளவில் இருறெயின்கள் ஒன்றின் மேல்ஒன்று பலமாகமோதுண்டமையால் ஏழுபேர் காயம் அடைந்தார்கள். தலைமைக்காட்டான திரு. சிவசம்பு, இளைப்பாறிய ஓர்ஆசிரியரான திரு. வி. பிதாம்பரம், திருமதி முருகேசு எனும்மாது ஆகியமூவரும் அபாயகரமானநிலைமையிலே காங்கேசன்துறைஆஸ்பத்திரியில இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. கடினகாயமடைந்தவனையோர் சாரதி சில்வா, அணடார்காட் ஆறுமுகம், பயர்மன் ஜோண்எனபவர்களாவர். றெயின்கள் இரண்டினதுமஎஞ்சின்கள் வெகுவாக்ச் சேதமடைந்தன. சிலபெட்டிகள் நொருங்கின. அங்கு றெயில்வேநிலையத்தில் றெயின்ஒன்று ஓடுபாதையில் விடப்பட்டிருந்தபோது, யாழ்ப்பாணத்திலிருந்துபோன காலைறெயின் அதேபாதையாற்செல்ல அனுமதிக்கப்பட்டமையினால் இரண்டும் ஒன்றோடொன்றுமோதி இந்தவிபத்து ஏற்படலாயிற்று.

### மோட்டர்கார் பந்தையஓட்டம்

மாட்சிமைதங்கிய எலிசபெத் மகாராணியார் அடுத்தவருடம் சித்திரை மாதம் இலங்கைக்கு விஜயஞ்செய்யும்போது சர்வதேச மோட்டர்கார் பந்தையஓட்டம்ஒன்று கொழும்பில்நடைபெறவிருக்கின்றது. இதிலே இந்தியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இலங்கை, மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து பந்தையகாரர் பலரும்வந்து போட்டியிடுவர். இதற்கு ஓர்ஆரம்பமாய் வருகிறமார்கழிமாதம் 27-ந்திகதியன்று கொழும்பிலே மோட்டர்கார் பந்தையஓட்டம் ஒன்று நடந்தேறும்.

### 60,000 தோன் சீனஅரிசி

மேலதிகமாகத் தனது கைவசமிருக்கும் சீனஅரிசியிலே 60,000 தொன்னைப் பிறநாடுகளுக்கு விற்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதிலே 3,000 தொன் அரிசியை ஐரோப்பிய நாடுஒன்றுக்கும், 30,000 தொன்அரிசியை யப்பானுக்கும் விற்பதானஒழுங்குகளை அரசாங்கம் செய்திருக்கின்றது. தொன்ஒன்றுக்கு 60 பவுண 5சிலின்வீதம் 30,000 தொன் அரிசியையும் வாங்க யப்பான் உடன்பட்டிருக்கிறது. மீதியான 27,000 தொன்னையும் வாங்க மோரிஷஸ், அராபியா, ஈறுய்க்முதலாம் நாடுகள் முன்வந்திருக்கின்றன. யப்பான் வாங்கியுள்ள 30,000 தொன்அரிசியும் இமமாதமுடிவிற்குள் அங்கு ஏற்றுமதி செய்யப்படும்.

### பரிதாபகரமான விபத்து

கோமகாமாவிலே ஏ. ஏ. வில்லியம் சிங்கோவும், அவரதுசகலனை ஆரோன்சிங்கோவும் தமதுகாரிலே அங்குள்ள ஆஸ்பத்திரிக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். வியேறிஸ் சிங்கோ அதனைச் செலுத்தினார். அது றெயிலபாதையைக் கடக்கும்போது ஏதோபிழையால் திடீரெனப்பாதையிலே நின்றுவிட்டது. அதிலிருந்து அதனைத்தள்ளி அப்பால் கொண்டுசெல்ல அவர்கள் எடுத்த முயற்சியெல்லாம வீணாயிற்று. இதற்கிடையில றெயின்ஒன்று அப்பாதைவழியாய்ச் சமீபித்துவருவதைக் கவனித்தமூவரும் காரைக் கைவிட்டுப் பாதைக்குஅப்பால் விலகிநின்று அந்தக்கார்மீது றெயின்மோதப்போவதைப் பார்த்துக்கொண்டு நின்றபோது, றெயின்வந்துமோதிய தாக்கத்தால் கார் அவர்கள்மீது தூக்கிவீசப்படலாயிற்று. அதனால் வில்லியம்சிங்கோ அந்தஇடத்தில்தானே உயிர்துறக்க, ஆரோன்சிங்கோ ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்படும்வழியில் இறந்துபோக, கார்ச்சாரதியான வியேறிஸ்சிங்கோ கொழும்புப் பெரியஆஸ்பத்திரியில் அபாயகரமான நிலைமையில் இருந்துவருகின்றார். பாவம், காருந்போய், உயிருமபோயிற்று.

# தக்காளிப் பழம்

(மார்க்கறேற் வான்அட்டா, ஆகாரநிபுணர்)

தக்காளிப்பழத்தின் சொந்தத்தேசம் தென்அமெரிக்கா. வெகுகாலமாகச் சனங்கள் இதை ஒருநஞ்சுப் பழமாகஎண்ணிப் புசிக்கப் பயந்திருந்தார்கள். ஆனால், அது ஒருகுணமான ஆகாரமென இப்போது உலகப்புகழ் பெற்றுவிளங்குகிறது.

செப்புப்பொருளை அடக்கியிருப்பதில் தக்காளிப்பழம் மற்ற எல்லாப்பழங்கள், காய்கறிகளை விடப் பேர்பெற்றது. செம்பு என்னத்திற்கு? என்று நீங்கள்கேட்கலாம். சரீரத்தில் ஏதோ ஒருசிறுஅளவு செம்பு இல்லாவிடில், சரீரத்திலுள்ளஇரும்பு இரத்தநிறம்பெறுவது கூடாது. தக்காளிப்பழத்தில் சுண்ணும்பு, பாஸ்பறஸ், இரும்பும் ஓர்சிறிதளவு உண்டு. இவைகள்எல்லாம் சரீரம் தன்தொழிலைச் செவ்வனேசெய்ய மிகவும்அவசியமானவைகள்.

தக்காளிப்பழமானது அவசியமான "மூன்றுசிவசத்துப்பொருட்களும் அடங்கியுள்ள ரசிகரமானபழம்" என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது. ஏ சிவசத்துப்பொருளானது வியாதிஅதிகரிக்கவொட்டாது தடைசெய்கிறது. கண்வியாதியும், பிறவும்வராது காக்கின்றது. பழங்களுள் தக்காளிப்பழந்தான் இந்த ஏ சிவசத்துப்பொருளுக்குக் கீர்த்திபெற்றது. ஏ சிவசத்துப்பொருளுக்குப் பேர்பெற்ற மற்ற உணவுகள் மீன்எண்ணெய், பாலாடை, பால், மெல்லியனவும் பச்சைநிறமுமான கீரைகளாகும். இவைகளுள் தக்காளிப்பழமும் சேர்ந்ததாகும். சாதாரண சமையலினுல் சிவசத்துப்பொருள் ஏ அழிந்துபோவதில்லை.

சிவசத்துப்பொருள் பி எல்லா இயற்கைஉணவுகளிலும் மலிந்துகிடக்கிறது. தக்காளிப்பழத்திலும் இது போதுமானஅளவு இருக்கிறது. இந்தச் சிவசத்துப்பொருள் எல்லாஉணவுகளிலும் இருக்கிறதெனினும் இது போதுமானஅளவு கிடைக்கும்படியாக நாம்—விசேஷமாச்சிறுவர்கள் அனுதினமும் குறைந்தது மூன்றுவிதமரக்கறிகளும், மூன்றுவிதபழங்களும் சாப்பிடவேண்டும். இந்தச் சிவசத்துப்பொருள் பசிதீபனம், குடல் இவைகள்சம்பந்தமாய்ப் பெருகத் தொழில் புரிகின்றது. ஆனால், ஸி சிவசத்துப்பொருள் சவதரிப்பதுதான் தக்காளிப்பழம் சரீரத்திற்குச்செய்யும் நன்மைகளிற்சிறந்தது. பல்வளர்ச்சிக்கும், கணைநோய்வராது தடுப்பதற்கும் ஸி சிவசத்துப்பொருள் இணையற்றது. உலகிலுள்ள அநேகருக்கு 'ஸ்கூர்வி' நோய் மிதமாய்உண்டு. சிவசத்துப்பொருள் ஸி குறைவாயுள்ள சிறுவர்கள் சுடுமூஞ்சிகளாயும், கட்டுக்கடங்காதவர்களாயும் இருக்கிறார்களெனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அவர்களால் வியாதியை எதிர்த்துநிற்க முடியாது. வாதரோகத்தை நிகர்த்த ஒருவிதநோய் அவர்களுக்கு உண்டாகும். பசிதீபனமும் மந்தமாயிருக்கும். இனிப்புப்பண்டங்கள் சாப்பிட அவர்களுக்கு அதிகபிரியம். இவைகள் எல்லாம் போஷணைக்குறைவின் அறிகுறிகள்.

சூடாக்கப்படும்போது சிவசத்துப்பொருள் ஸி எளிதில் அழிக்கப்பட்டுப்போகிறது. ஆனால், புளிப்புத்திராவகம் கலந்திருக்கும்போது அது அவ்வளவு கெட்டுப்போவதில்லை. தக்காளிப்பழத்தில் இந்தப்புளிப்புத் திராவகம் இருப்பதால் அது சமைக்கப்பட்டாலும், அல்லது வேறுஎவ்விதமாய்ப் பக்குவம்பண்ணப்பட்டாலும் அதிலுள்ள ஸி சிவசத்துப்பொருள் அழிந்துபோவதேகிடையாது. ஆகையால், தக்காளிப்பழமானது ஸி சிவசத்துப்பொருளுக்கு உறைவிடமாகிறதெனக் கூறலாம்.

# நானா சங்கதிகள்

— நியூயோர்க்நகரிலே பிரசுரமாகும் "டெயிலி வேக்கர்" எனும் கம்யூனிஸ் பத்திரிகையானது கொண்டுநடத்துவதற்குப் பணமில்லாது நிறுத்தப்பட வேண்டியிருப்பதாக அறிவித்திருக்கிறது. 20,000 பவுண் சேகரிப்பதற்கென்று சிலவாரங்களின்முன் அது எடுத்தஎடுப்புப் பலனளிக்கவில்லை.

— போலாந்தின் திருச்சபை அதிபரும், வார்சோநகர் அதிமேற்றிராணியாருமான கருதினல் விசின்ஸ்கிஆண்டவர் ருஷியாவுக்குக் கொண்டுபோகப் பெற்றுத் தற்போது அங்கே மஸ்கோநகரில் இருக்கிறுரெனப் பேர்னின் மேற்றிராசனத்து அதிகாரபூர்வமான "பெற்றுஸ் பிளாற்" எனும் கத்தோலிக்க வாரவர்த்தமானி தெரிவிக்கின்றது.

— லண்டனுக்கும் நியூசிலாந்துக்கு மிடையே சமீபத்தில் நடந்தேறிய ஆகாயப்பந்தையத்திலே தீவிரவேகப் பகுதியில் முதல்வெற்றிபெற்ற பிளைற்-லெவ்ரினன்ட் ரூலன் பேட்டான்என்ற பிரித்தானியர் லண்டன்நகரிலே பட்டர்சி எனுமிடத்திலுள்ள சலேசியன் கல்லூரியில் கல்வியயின்றவர். அங்கு 1929—1933-ம்ஆண்டுவரை விடுதிப்பாடசாலை மாணவராய் இருந்தவர்.

— பரிசுத்த தேவதாயார் சகலவரப்பிரசாதங்களினதும் மத்தியஸ்தி என்பதை விசுவாசசத்தியமாக நிர்ணயிக்குமாறு கேட்டுச் சென்ற ஐப்பசிமாதம் ஸ்பானியதேச சான்ராண்டர் நகருக்குச் சமீபமான கோமிறெசெஸ் சந்நியாச ஆச்சிரமத்தில் மகாநாடுகூடிய ஸ்பானிய வேதசாஸ்திர பண்டிதர்கள் பரிசுத்தபாப்பரசருக்கு மனுப்பண்ணியிருக்கின்றார்கள். ஸ்பானிய மேற்றிராசன குருமாரினதும், இருபது சந்நியாச சபைகளினதும் பிரதிநிதிகள் அம்மகாநாட்டில் பிரசன்னமாயிருந்தார்கள்.

— 6 பிள்ளைகளையும், 7 பேரப்பிள்ளைகளையும், இருபீட்டப்பிள்ளைகளையும் உடையவரான திரு. ஜோண் ஹென்றி அவர்கள் தனது 74-ம் வயசிலே சமீபத்தில் அமெரிக்க ஐக்கியதேச வெலெஸ்லி நகரிலுள்ள திருக்கரய சபையில் ஓர் சந்நியாசியாகச் சேர்ந்திருக்கிறுர். அப்போது நடைபெற்ற திருச்சடங்கின்போது அவர்கள் எல்லாரும் சமூகமாயிருந்தார்கள். அதிலே அவருடைய புதல்வரான வண. தோமஸ் ஹென்றி சுவாமியார் உதவிசெய்தனர். திரு. ஜோண் ஹென்றிஅவர்களின் பாரியார் 1940-ம் ஆண்டு காலஞ்செல்லலாயினர்.

---

உமக்குத் தோட்டமிருக்குமாயின் தக்காளிச் செடிகள்சில பயிர்செய்ய மறந்துவிடாதேயும். ஏனெனில், காசுகொடுத்து அநேகபழங்கள் வாங்கிச் சாப்பிட முடியாதிருக்கும் இந்தப் பணக்கஷ்டகாலத்தில் தக்காளிப்பழம் நமக்குஅவசியமான சத்துப்பொருட்களில் பெரும்பாகத்தைச் சவதரிக்கிறது அதை எப்படிவேண்டுமானுலும் சாப்பிடலாம்.

அவசியமான உலோகப்பொருட்கள் சவதரிப்பதுடன் தக்காளிப்பழம் மூன்று சிவசத்துப்பொருட்களின் உறைவிடமாயுமிருக்கிறது. விசேஷமாய் மற்றஆகாரங்களிலுள்ள ஸி சிவசத்துப்பொருள் அவைகள் சமைக்கப்படும்போது சீக்கிரத்தில் அழிந்துபோனுலும் தக்காளிப்பழத்தில் அது அழிவதேஇல்லை.

நாமெல்லாரும் போதுமான தக்காளிப்பழம்சாப்பிடவேண்டும். அவைகள் மிகவும்சாரசமானவை. எத்தனையோ நாவுக்குருசியான உணவுவகைகள் அதிலிருந்துசெய்யலாம். தக்காளிப்பழத்திலுள்ள ஆரோக்கியசத்துப்பொருட்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதன.

# தேம்பாவணியும் செபமாலையும்

## களிகூர்ந்தகாரணிக்கம்

### 2-ம் காரணிக்கம் — 4-ம் பிரியதத்தம்

### 14. மரியாளின் வாழ்த்துரை

**பண்டிதர், C. செல்வரத்தினம்**

மாதவன் சூசையும், மரியாளும் நசரேத்திலிருந்து புறப்பட்டு, நெடுந்தூரம் வழிநடந்து எப்ரோனிலுள்ள எலிசபெத்தம்மாளின் நிவாசத்தை அடைந்தனர் அன்றே! இவர்களின் வரவை அறிந்து எதிர்பார்த்திருப்பார் போலச் சக்கரியாசும், அவருடைய தர்மபத்தினி எலிசபெத் தம்மாளும் வாசற்படியில் காத்துநிற்கின்றனர். பின்னர் உறவினர்களாகிய அவர்களைக் கண்டதும்......

"மின்னெதிர் விளக்கென......"

மின்னலை எதிர்கொண்ட விளக்குப் போலவும்,

"...................... விரிந்த வில்செயப்
பொன்னெதிர் மணியென......"

விரிவாய் ஒளியை(வில்)ப் பரப்பப் பொன்னை எதிர்கொண்ட இரத்தின மணிபோலவும்,

"......................புரிந்த அன்பினுல்
தன்னெதிரிலார்க்குமுன் சக்கரீயனும்
அன்னெதிர் அணைவியும் தொழுதெதிர்ந்தனர்"

பாராட்டிய அன்பினுல் மற்றெவர் தன்னிலும் இணையற்றவர்களாகிய மரியாளும், சூசையும் என்றிவர்களைச் சக்கரீயனும், அவர்தம் துணைவியாகிய எலிசபெத்தம்மாளும் ஒருங்கேவந்து தொழுது எதிர்கொண்டனர்.

அப்பொழுது உடல் தன்னைவிட்டு நீங்கிய உயிரை அன்போடு தழுவுந் தன்மைபோலச் சிறந்த அருந்தவத்தோராகிய சூசையும், சக்கரீயனும் ஒருவரையொருவர்கட்டித்தழுவிநிற்க, தேனிறைந்தமலர்கள் பூத்தகொம்பினைச் சுற்றி அணைத்துக்கொண்ட பூங்கொடியைப்போல அருளின்மிக்க மங்கை நல்லாராகிய மரியாளும் எலிசபெத்தம்மாளும் தங்கள் உள்ளங்கைகளால் ஒருவரைஒருவர் அணைத்துக் கொண்டார்கள். அதாவது:

"நீர்த்தமெய் உயிரினைத் தழுவு நீர்மையால்
சீர்த்தருந் தவர்தமைத் தழுவித் தேன்மலர்
போர்த்தகொம் பணைத்தபூங் கொடியைப் போலருட்
கூர்த்தநன் மாதருங் குடங்கைவீக்கினுர்"

பிரிந்தவர் கூடினுற் பேசவும்வேண்டுமா? என்றாற்போல நீண்டநாட்களாகப் பிரிந்திருந்த அந்நால்வரும் அன்று எதிர்பாராத வகையாகச் சந்தித்தமையால், அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கோ அளவில்லை. ஒருவரையொருவர் தழுவி அணைத்து அன்பினுல் ஐக்கியமாகித் திளைக்கின்றனர். இவ்வியல்பினை விளக்கப்போந்த வீரமாமுனிவரும்,

"அள்ளிய வலர்களு மலருள் வாசமும்
தெள்ளிய கனிகளும் கனியுட் டேறலும்
வள்ளிய மணிகளும் மணியுள் வாமமும்
உள்ளிய நிலைக்கவர் உறைந்த சீர்மையே"

என்று அழகாகக் கூறியுள்ளார். அதாவது: அவர்கள் ஒருவரையொருவர் தம்மைத் தழுவிக்கொண்டது எத்தன்மையாய் இருந்ததெனில், நெருங்கிப்பூத்த (அள்ளிய) மலரும், மலர் உட்கொண்ட வாசனையும்போலவும், தெளிந்த(தெள்ளிய)கனிகளும், அவைகள்உட்கொண்ட நறுந்தேன்(தேறல்) போலவும், ஆபரணத்திலுள்ள(வள்ளிய) மணிகளும, அவைகள் உட்கொண்ட ஒளியின் வடிவுபோலவும்என்று நினைத்த தன்மையாய் இந்நால்வரும் வேற்றுப் பிரிப்பற்றோராய் இருந்தவர்போல விளங்கினுரென்று புலவர் கூறும்மொழிகள் அவ்விரு குடும்பத்தவர்க்குமுள்ள நெருங்கியதொடர்பை இனிதெடுத்துக் காட்டுவனவாகும்.

யாரைக் காணவேண்டுமென்று அதுவரையும் மரியாள் துடியாய்த் துடித்தனளோ, அவளையே அப்பொழுது கண்ணாரக்கண்டதும் அவளின் மாசற்றஉள்ளம் ஆனந்தத்தால்பொங்கி அக்களிக்கின்றது. வழிநடந்து ஏற்பட்ட அயர்ச்சியும், ஆயாசமும் பகலவனைக்கண்ட பனிபோல நீங்கிவிடுகிறது. தன்னைத் தீவிரித்துஏகுமாறு ஏவிய தேவதூதனைச் சற்றேசிந்தித்துப் பார்க்கின்றுள். அந்நேரத்தில் அவளையுமே அறியாமல் அவள்வாயினின்றும் ஒருவாழ்த்துரை பிறக்கின்றது.

"வற்றி யேமுகில் மாரிசெய் வாரியால்
பெற்றி யேபெறும் ஓடையில்......"

கோடைகாலத்தில் நீரின்றி வற்றியிருந்து பின்னர் மாரிகாலம்வந்ததும் மேகமானது பொழிகின்ற மழைவெள்ளத்தால (வாரி) இனிதாய் நிறைந்து வளம்பெறும் தடாக(ஓடை)த்தைப் போல்

"................................பெற்றநாள்
முற்றி யேநய முற்றுறச் சூலருள்
உற்றி யேயெனக் கன்னி உரைத்தனள்"

நீயும் பிள்ளைப் பாக்கியமில்லாமல் "உன்வாணாள் (பெற்றநாள்) முதிர்ந்து வயதுபோன காலத்தின்பின் மிக்கஇன்பங்கொண்டு மகிழ (நயமுற்றுற)ப் பிள்ளைவரம் அடைந்து கருப்பங்கொண்டாயே" என்று கன்னிமரியாள் எலிசபெத்தம்மாளை நோக்கிக் கூறினுள்.

"வற்றி யேமுகில் மாரிசெய் வாரியால்
பெற்றியே பெறு மோடையில் பெற்றநாள்
முற்றி யேநய முற்றுறச் சூலருள்
உற்றியே யெனக் கன்னி உரைத்தனள்"

"மரியம்மாள் எழுந்து மலைநாட்டிலே யூதா தேசத்திலுள்ள ஓர் பட்டணத்துக்குத் தீவிரமாய்ப்போய்ச் சக்கரியாசுடைய வீட்டில் பிரவேசித்து எலிசபெத்தம்மாளை வாழ்த்தினுள்" என்பது சுவிசேஷவாக்கியம்.

---

— போலாந்திலே ஜினியெஸ்னோ நகரின் துணைமேற்றிராணியாரான பேர்ணக்கிஆண்டவரையும் போலிஷ் கம்யூனிஸ்த அரசாங்கம் கைதுசெய்திருக்கின்றது. அது சிறைப்படுத்திய ஒன்பதாவது போலிஷ் மேற்றிராணியார் இவர். கருதினல் விசின்ஸ்கிஆண்டவர் தமது அதிகாரபதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுது தடுத்துவைக்கப்பட்டபோது இவர் முன்னும் ஓர்முறை கைதுசெய்யப் பட்டிருந்தார்.

— திருச்சிலுவைச் சபையைச் சேர்ந்த ஓர் அமெரிக்க குருப்பிரசாதியான வண. றிச்சேட் ரிம் சுவாமியார் பாகிஸ்தானிலே டக்காநகர முஸ்லீம் சர்வகலாசாலையைச் சேர்ந்திருக்கின்றுர். டக்காநகரிலுள்ள செண்ஜோர்ஜ் கல்லூரியில் விஞ்ஞானசாஸ்திரப் பகுதித் தலைவராயிருந்த இவர் அங்குள்ள இந்த முஸ்லீம் சர்வகலாசாலைக்குச் சீவசாஸ்திர போராசிரியராய் இரவலாக உதவப்பெற்றிருக்கின்றுர்.

# 60 வருடங்களுக்கு முன்

பிரான்சிலிப்போதுதானே முதன் முறையாக ஆபிரிக்கநாடு ஒன்றைச்சேர்ந்த ஓர்காப்பிரிச்சாதிக் குருவானவர் பங்குவிசாரணைக் குருவானவராகக் கடமையாற்றத் தொடங்கியிருக்கின்றார். அங்கு தூலூஸ் மேற்றிராசனத்தின் ஓர் கோணத்திலுள்ள ஐந்துசிறியகிராமங்கள் ஓர்விசாரணைப்பங்காக வகுக்கப்பெற்று, குருப்பட்டத்துக்குப் பிந்திய தமது படிப்புகளை முடித்துவருகின்ற இந்தக்காப்பிரிக்குருவானவரின் பொறுப்பிலே விடப்பட்டிருக்கின்றன. அவர் முதல்ஞாயிற்றுக்கிழமை சுத்தமான பிரான்சியபாஷையில் செய்தபிரசங்கத்திலே கூறியது வருமாறு:

“இற்றைக்கு 60 வருடங்களின்முன்னர் ஆபிரிக்காவிலுள்ள எனதுநாட்டில் எனது சனங்களை அடிமைகளாக நடத்திக்கொண்டுபோவதை ஒருவர் காணக்கூடியதாய் இருந்தது. கொள்ளையடிக்கப்பட்ட கிராமங்களையும், வேறாகப் பிரித்துவைக்கப்பட்ட குடும்பங்களையும், எங்கெங்குமே ஆடவர்களும் பெண்களும் ஆடுமாடுகளைப்போல நடத்தப்பட்டதையும் ஒருவர் காணக்கூடியதாய் இருந்தது. ஆனால், அப்போது வெள்ளைக்குருமார்என அறியப்படுகிற கத்தோலிக்கமிஷனரிமார் விசுவாசத்தையும், நம்பிக்கையையும், தேவசிநேகத்தையும், தம்முடனேகொண்டு அங்கே வந்தார்கள். அவர்கள் உங்கள் தேசத்திலிருந்துவந்தமனிதரே. அவர்கள் எங்கள் ஆன்மாக்களை உயிர்கொடுத்து எழுப்புமாறு எங்களுச்கு உதவி செய்யவும், மனிதரின் இரட்சிப்பைப்பற்றிய அறிவைப் போதிக்கவுமாகத் தங்கள்உயிரையும், தங்கள்உதிரத்தையும்தானுமே தியாகஞ்செய்தார்கள். ஆனால், இன்று அவசியம் நேர்ந்திருக்கையில் சுவிசேஷ செய்தியைப்பற்றி உங்களுக்குஎடுத்துக்கூறும்படி, தூரமான அந்தநாட்டிலிருந்து தருணம்பார்த்து வந்திருக்கின்ற ஓர்மனிதர் நான்.

“ஆபிரிக்காவிலுள்ள சனங்கள் திவ்வியபூசைகாண இரண்டுநாள் நடக்கின்றார்கள். ஆகையால், உங்கள் வீட்டு வாசற்படியிலே நிறைவேறுகிற பூசையைக் காணவரும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் வேதவிசுவாசத்திலே எங்களுக்கு எவ்வளவோமூத்தவர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் நல்லமுன்மாதிரிகை காண்பிக்கவேண்டும். நாங்கள் இன்னமும் உங்களையே காத்துக்கொண்டிருக்கிறோம். அஞ்ஞான ஆபிரிக்காவை வெற்றிகொள்ள உங்கள் உதவியை நாங்கள் இன்னுமே வேண்டிநிற்கின்றோம்.”

* * *

## ஓர் சிறைச்சாலைபோல

அமெரிக்க ஐக்கியதேச சிக்காகோநகரிலே போலிஷ் சந்ததியினரான 600 பேர் குழுமியிருந்தசமூகத்தில் திரு. மாறெக் கொறோலிக்ஸ்எனும் போலிஷ் பிரமுகர் பேசியபோது: “போலாந்துதேசம் ஓர்சிறைச்சாலைபோல் இருக்கிறது” எனக் கூறியிருக்கின்றார். இவர் ஐக்கியநாடுகளின் மகாசபைக்குப் போலாந்த கம்யூனிஸ்த அரசாங்கத்தின் பிரதிநிதியாகச் சென்றிருந்த ஓர்போலிஷ்காரர். “போலாந்திலுள்ள ஒவ்வொருவருமே பொய்சொல்லவேண்டியிருக்கின்றனர்; தான்நினையாததையே பேசவேண்டியிருக்கின்றனர்; கம்யூனிஸம் தங்களுக்கு ஒத்தாசை செய்யலாமென்று சிலர் நினைக்கலாம்; ஆனால், கம்யூனிஸத்தின்கீழ் அவர்கள் அடிமைகளாகிக்கொண்டுதான் இருக்கிறார்கள்; போலிஷ்மக்களின் வேதவிசுவாசத்தைத் தாங்கள் அடக்கியொடுக்க முடியாதென்று ரூஷியர்கள் கண்டுகொண்டதும், குருமாரின் வேததொண்டுகளை அடக்கியொடுக்கிவிடுமாறு முயற்சிக்கத் தொடங்கினார்கள்; எங்ஙனமாயினும் இதன்விளைவு, மக்களின் வேதவிசுவாசத்தைப் பலப்படுத்துவதாகவே இருக்கும்” என்றும் அவர்கூறலாயினர்.

## கத்தோலிக்க மந்திரியார்

அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹாவர்அவர்கள் தமது மந்திரிசபையில் தொழில்மந்திரியாராய்த் திரு. மாட்டின் டேர்க்கின் அவர்களை நியமனஞ்செய்திருந்தார். அவருடைய மந்திரிமார்களில் கத்தோலிக்கர் இவர் ஒருவரே. ஆனால், ராவ்ற்-ஹாட்லித் தொழிற்சட்டத்தை மீளவும் ஆராய்வதன் சம்பந்தமாய் வெணமாளிகையுடன் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக இவர் சென்றமாதம் தமதுமந்திரிபதவியை இராசிநாமாச் செய்துவிட்டார். தற்போது இவரிடமாக ஜனாதிபதி மற்றோர் கத்தோலிக்கரான திரு. ஜேம்ஸ் மிற்செல்அவர்களைத் தொழில் மந்திரியாக நியமனஞ்செய்திருக்கின்றார். தற்போது 52 வயதுடையவரான இவர் தொழில் ஸ்தாபனங்கள் பலவற்றிலும் உயர்ந்தபதவிகள் வகித்திருந்தவர். சமீபகாலமுதல் இவர் அமெரிக்க தரைப்படையின் உதவிமந்திரியாக்க் கடமை பார்த்துவந்தார்.

# றோமைநகரின் மற்றோர் அணிகலம்

அமெரிக்க ஐக்கியதேசத்திலுள்ள சகல மேற்றிராசனங்களுக்குமாக றோமாபுரியிலே நவமாகக் கட்டியெழுப்பப்பெற்ற வட அமெரிக்க குருமடமானது சென்றஐப்பசி 14-ந்திகதி புதன்கிழமை பரிசுத்தபாப்பரசரால் ஆசீர்வதித்துத் திறந்துவைக்கப்படலாயிற்று. அவர் இதற்கெனக் காஸ்றெல் கான்டல்போவிலுள்ள தமது வேனிற்கால மாளிகையிலிருந்து றோமைநகர்சென்று, திருவைபவம் முடிந்ததும் உடனே தானே அங்கு திரும்பலாயினர். அவர் புதியகுருமடம் போய்ச்சேர்ந்தபோது 15 கருதினல்மாரும், அமெரிக்க மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமாராய் 33 பேரும், மற்றும் 80 அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரும், பாப்பரசரது பரிவாரத்தைச்சேர்ந்த குருசிரேஷ்டர்கள், அதிகாரிகள் சகலரும் அவரை வரவேற்று வாழ்த்தினின்றார்கள். இவர்களைத்தவிர, பரிசுத்த ஸ்தானத்தினிடமாக இருந்துவருகின்ற ஸ்தானிகர்கள்சகலரும், இத்தாலிய அரசாங்கத்தினிடமாக இருந்துவருகின்ற அமெரிக்கஸ்தானிகரான ஸ்ரீமதி கிளேயர்பூத் லியூஸ்அவர்களும், இத்தாலிய அரசாங்க பிரதிநிதிஒருவரும், றோமை நகரசபைப் பிரதிநிதிகளும் சமூகமளித்திருந்தார்கள்.

### மகத்தான பாரிய கட்டடம்

இந்தப்புதிய குருமடமானது ஜனிக்கியூலம் குன்றின் சாரலிலே, பன்னிரு ஏக்கருக்கு மேற்பட்ட விஸ்தீரணமான நிலத்திலே சுமார் 12 லட்சம் டலர்செலவிட்டுக் கட்டப்பட்டுள்ளது. கலாசங்கநிலையங்கள், பேராசிரியர்களின் வாசஸ்தலங்களைத் தவிர 311 குருத்துவமாணவர்கள் தங்கியிருந்து கல்விபயில்வதற்கான சகலவசதிகளையும் கொண்டது. சம்பேதுருவானவர் மகாலயத்திலிருந்து ஏறக்குறையப் பத்துநிமிஷ நடைத்தூரத்திலே, இற்றைக்குத் 94 வருடங்களுக்குமுன் ஒன்பதாம் பத்திநாதபாப்பானவரால் அடியிடப்பெற்ற அதே குருமடம் அமைந்திருந்த “வியா டெல் யூமில்ரா” எனுமிடத்திலே, ஏழுமாடிகளுடனும், மாணவர்களுக்கென 311 அறைகளுடனும், மகத்தான கட்டடங்களுடனும் கூடிய இந்தப்பாரிய குருமடம் விசுவாசப்பரப்புதற்சபைக் குருமடத்தையடுத்து இத்தாலியிலே பாப்பரசருக்கு வழங்கப்பட்டுள்ள “மேலதிநாடு” பகுதியில் கட்டியெழுப்பப் பட்டுள்ளது.

### உலாவக்கூடிய மேன்மாடிகள்

இதன் கட்டடங்களில் அதிகமானவற்றின் கூரைகள்மீது மேன்மாடிகள் அமைக்கப்பட்டிருப்பதால் அவற்றிலே மாணவர்கள் உலாவக்கூடியவர்களாய் இருக்கின்றார்கள். இதன் திறப்புவிழாவுக்குச் சமுகமளிக்குமாறு சிக்காகோநகரின் கருதினல் ஸ்றிற்ச் ஆண்டவரும், நியூயோக்நகர கருதினல் ஸ்பெல்மன் ஆண்டவரும், டெற்றோயிற் நகர கருதினல் மூனி ஆண்டவரும் ஆகாய விமானங்களிலே அங்கு சென்றிருந்தார்கள். இவர்களைத்தவிர அமெரிக்க மேற்றிராணிமார் 30 பேரும், அங்கு பழைய அமெரிக்க குருமடத்தில்பயின்ற குருமார் 100 பேரும் பிரசன்னமாயிருந்தார்கள்.

# திருச்சபையின் வீரர் திலகங்கள்

சிறைவைக்கப் பட்டிருப்பவர்களும், மேற்றிராசனங்களிலிருந்து துரத்தப்பட்ட—அன்றேல் தங்கள் அதிகாரபதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றாது தடுக்கப்பட்டவர்களுமான கருதினல்மார், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களான 133பேரின் நாமங்களைக்கொண்ட அதிகாரபூர்வமான இடாப்பு ஒன்றை வத்திக்கான் இராச்சிய மந்திரிகாரியாலயம் வெளியிட்டிருக்கின்றது. ஆனால், உள்ளபடியே இந்தப்புள்ளிவிபரத்தில் கம்யூனிஸ்த வேதகலாபனைக்குப்பலியான குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரீமார் அடங்கமாட்டார்கள். இவர்கள்தொகை ஆயிரக்கணக்கிலெனஅறியப்பட்டுள்ளது. மேலும் இதிலே மரணதண்டனை விதிக்கப்பெற்ற,—அன்றேல் சிறைமுகாங்களில் மரணமடைந்த மேற்றிராணிமாரும் அடங்கமாட்டார்கள். கருதினல்மார், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களாய் 40 பேர் சிறைச்சாலைகளில் இருந்துவருவதாக அறியப்பட்டிருக்கிறது. 42 பேர் பிறவழிவகைகளால் தங்கள் அதிகாரபதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றாது தடுக்கப்பட்டிருக்கின்றனர். 38 பேர் நாடுகடத்தப்பட்டிருக்கிறார்கள்.

## அர்ச்சிய சிஷ்டர்களின் சர்வகலாசாலை

றோமாபுரியிலே அர்ச். இஞ்ஞாசியாரால் அடியிடப்பெற்றதும், அர்ச்சியசிஷ்டர்களின் சர்வகலாசாலைஎனும் சிறப்புப் பெயரால் அறியப்படுவதுமான கிறகோரியாரின் சர்வகலாசாலை ஸ்தாபகமான நான்காம் நூற்றாண்டுவிழா சமீபத்திலே கொண்டாடப் பட்டபோது அதன்சிரேஷ்டர்கள், பேராசிரியர்கள், மாணவர்களுக்குப் பேட்டியருளுமாறு பரிசுத்தபாப்பரசர் காஸ்றெல் கான்டல்போவிலிருந்து இரண்டாம்முறையாக றோமாபுரிககுத் திரும்பலாயினர். அச்சுபசந்தர்ப்பத்திலே அவர் தமதுகரத்தால் அதன் அதிபருக்கு எழுதியனுப்பிய விசேஷ திருமுகம் ஒன்றிலே, உலகின் சகலநாடுகளிலுமிருந்து மேற்றிராசன குருமாருக்குரிய 40 குருமடங்களும், 80 சந்நியாசசபைகளும் இந்தச்சர்வகலாசாலைக்குக் குருத்துவமாணவர்களை அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிவித்திருந்தார். இந்தச் சர்வகலாசாலை “கத்தோலிக்க திருச்சபையின் ஐக்கியத்தினதும், பொதுவாயிருக்கும் தன்மையினதும் உயிருள்ள ஓவியம்” என்றும் பாப்பரசர் கூறலாயினர்.

## விசேஷ அறிவித்தல்

வண. குருப்பிரசாதிகளே,
அன்புள்ள பிள்ளைகளே,

மழைக்குறைவால் எங்கும் பலகஷ்டங்கள் ஏற்படுகிறபடியால், போதிய மழைக்காக அனைவரும் செபியுங்கள். சிறுபிள்ளைகளின் மன்றாட்டத்தை விரும்பிக் கேட்கிறோம். பிரசித்தஆராதனை நேரங்களிலும், விசேஷமாய் ஞாயிற்றுக்கிழமைப் பொதுஆராதனையிலும் விசேஷ செபங்கள் ஒப்புக்கொடுக்கப்பட வேண்டுமென்பதை இத்தால் அறிவிக்கிறோம்.

✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்

மேற்றிராசன மாளிகை
யாழ்ப்பாணம்
12-11-53

## கார்த்திகை மாதம்

போதுக்கருத்து :— இல்லிட வசதிக்குறை நீங்கும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து :— ஆபிரிக்காவிலே கல்விச்சாலைகளின் சுதந்திரத்திற்காக வேண்டிக்கொள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்
1953-ம் ஆண்டு
கார்த்திகை மாதம் 12-ந் திகதி

## தோல்வித்தானம்

மணிமகுடம் சிரசிலேதாங்கியும், கவின்மிக்க செங்கோல் கரத்தேந்தியும், நவரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்தும் அரசுநடாத்திய மன்னர்களனைவரும், மன்னாதி மன்னர்களனைவரும் காலம் உலகமுழுவதிலுமே அதிகமாக மறைந்துவிட்டது. ஆம், கடந்த அரைநூற்றூண்டு காலத்திலே நாமெல்லாம் அறியத்தக்கதாகச் சரித்திரப் பெருமைவாய்ந்த எத்தனையோ அரசவம்சங்கள் அழிந்தொழிந்தன. சுவர்க்க குமாரனெனப் பெயர் விளங்கியிருந்த சீனச் சக்கிரவர்த்தி எங்கே? சமயபக்தர்கள் சகலருக்கும் தளகர்த்தர்தாமேயென்று பெருமுழக்கஞ்செய்து நின்ற துருக்கிய சுலுத்தான் அரசர்எங்கே? ருஷியமக்களுக்கெல்லாம் ராஜமகா ராஜன் தாமேயென்று வீரகர்ச்சனை செய்துநின்ற ஸார் சக்கிரவர்த்தி எங்கே? அகிலமுழுவதையும் கட்டியாளவேண்டுமென்ற ஆணவங்கொண்டு போர்க்கறைகூவி நின்ற கெய்சர் சக்கிரவர்த்தி எங்கே? அம்மம்ம! ஐரோப்பாக்கண்டத்திலே கடந்த அரைநூற்றூண்டும் பேரரசர்களும், சிற்றரசர்களுமான எத்தனைமன்னர்களினதும்—எத்தனை இராச்சியங்களினதும் இறுதியைக் கண்டுவிட்டது. ஆனல், கடந்த அரைநூற்றூண்டில் அல்ல, ஒரு நூற்றூண்டில் அல்ல, கடந்துபோன இருநூறு நூற்றூண்டுகளிலும் அழியாத—ஒழியாத—அழிக்கவும், ஒழிக்கவும், தமது திவ்விய சிம்மாசனத்திலிருந்து அகற்றப்படவும்முடியாத ஓர் அரசர்—அரசர்க்குஅரசர் ஒருவர் குன்றுப் பெருமையுடன் இன்றுமே ஆட்சிசெய்து வருகின்றூர். அவர் யார்? அவர்தான் கிறீஸ்துதேவ அரசர். அவருடையஇராச்சியம், அவராலேயே அடியிடப்பெற்று அகிலமுழுவதும் பரந்திருக்கும கத்தோலிக்க திருச்சபையாகும். இது ஸ்தாபகமாகிப் பெரிதும் ஆச்சரியத்துக் குரியவிதமாய்ப் பரம்பத் தொடங்கியபோது, அதனை முளையிற்றூனே வேரோடுகளைந்து குழிதோண்டிப்புதைத்துவிடுவான் முடிமன்னர்களும், கொடியவிரோதிகளும் கங்கணங்கட்டியெழுந்து பயங்கரவேதகலாபனை நடத்தினூர்கள். கடந்த இரண்டாயிர வருடங்களாக இன்னமும் நடத்திகொண்டே வருகின்றூர்கள். ஆனல், அது அழிந்தபாடேயில்லை. ஒழிந்தபாடேயில்லை. ஆனல், இன்னமும் அதுபரந்துகொண்டேயிருக்க, அதனை அழிக்கவும், ஒழிக்கவும்முனைந்த அதன்மேல் போர்க்கறைகூவியெழுந்த சகலருமே அழிந்தார்கள். ஒழிந்தார்கள். அங்ஙனமாக, முந்தியநாட்பெய்த மழைக்கு நேற்றுமுளைத்த காளான்போன்று தலைகாட்டிய நாஸ்திககம்யூனிஸம் இன்று அதனுடன் நடத்திக்கொண்டிருக்கும் பலப்பரீட்சையின் விளைவு யாதாகுமென்று சந்தேகிக்கவேண்டியதில்லை. ருஷியாவில், யூகோசிலேவியாவில், சீனவில், செக்கோசிலவாகியாவில், ஹங்கேரியில், போலாந்தில், மற்றும் தனதுகொடுங்கோல் ஆட்சிக்குட்பட்ட வேறேதாவதொரு நாட்டில் அது கருதினல்மாரை, மேற்றிராணிமாரை, குருமாரை, சந்நியாசர், கன்னியாஸ்திரீமாரை, சாதாரணகத்தோலிக்கரைக் கொலைப்படுத்தியோ, சிறைப்படுத்தியோ, நாடுகடத்தியோ, கோவில்கள்மடங்களைச் சூறையாடியோ அதுசெய்யும் அட்டூழியங்களெல்லாம் அதன் பலக்குறைவையும், பலாத்காரமுறையையும், அபஜெயத்தையும், தோல்வித்தானத்தையுமே பகிரங்கமாகக் காண்பிப்பதாகும். சனநாயகத்தை எதிர்ப்பது கம்யூனிஸ்தசர்வாதிகாரம். ஆனல், சனநாயகத்துக்கே சதாநாயகமாய்விளங்கும் கத்தோலிக்கதிருச்சபையை அது பன்மடங்குமும்முரமாக எதிர்ப்பதில் ஆச்சரியந்தான்என்ன?

---

இஸ்பிரீ. ஆகமனத்தின் பின

## 25-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(மத். 13: 31—35)

அர்ச். மத்தேயு எழுதிவைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி :— அந்தக் காலத்திலே யேசுநாதர் சனக்கும்பல்களுக்கு உவமையாகத் திருவுளம்பற்றினதாவது: பரலோக இராச்சியமானது ஓர் மனிதன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்த கடுகுமணிக்கு ஒப்பாயிருக்கின்றது. அது சகலவித்துக்களிலும் மிகவும் சிறியதாயிருந்தாலும், வளரும் போது சகல பூண்டுகளிலும் அதிகம் பெரிதாகி, ஆகாயத்தின் பட்சிகள் அதில் கிளைகளிலே வந்து வசிக்கத்தக்க மரமாகிறது என்றூர். இன்னமும் அவர் அவர்களுக்கு உரைத்த வேறூர் உவமையாவது: பரலோக இராச்சியமானது மூன்று மரக்கால் மா முழுதும் புளிப்பேறும்படி ஓர் ஸ்திரி அதற்குள் மறைத்து வைத்த புளிக்காரத்துக்கு ஒப்பாயிருக்கிறதென்று திருவுளம் பற்றினூர். யேசுநாதர் இவையெல்லாம் சனக்கூட்டத்திற்கு உவமைகளாகச் சொன்னூர். உவமைகளினூலன்றி வேறுவிதமாய் அவர்களோடு பேசினவரல்ல. இவ்விதமாய்: நான் உவமைகளில் என் வாயைத் திறப்பேன், உலக ஆரம்ப முதல் மறைவாய் இருப்பவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்க தரிசியால் சொல்லப் பட்டது நிறைவேறும்படியாயிற்று.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

## கம்யூனிஸ்த செஞ்சீன

“கம்யூனிஸ்த ஆட்சியாளர் சீனமக்களை அடிமைகளாக்கியிருக்கும் மா பயங்கரம் ஒரு படிப்பினையைப் புகட்டுகிறது” என்று “நேஷன்” என்ற பர்மிய தினசரிப் பத்திரிகை எழுதுகிறது. அதுமேலும்எழுதியிருப்பது வருமாறு: “சமத்துவம், சமாதானம், விடுதலை என முரசறையும் கம்யூனிஸம் நடத்தையில் நேர்மாறுக இருக்கிறது. எனவே, கம்யூனிஸ்த பசப்புவார்த்தைகளில் தினையளவு நம்பிக்கை வைப்பதும் மிகமிகப்பெரிய ஆபத்து. அதுவே படிப்பினை.

“சீனமக்களில் நூற்றுக்கு இருவரே ‘ஊறின’ கம்யூனிஸ்தர்கள் என்று செஞ்சீனவிலிருந்து நாடுகடத்தப்பட்ட கத்தோலிக்கமத குரவர் ஒருவர் புள்ளிவிபரம் தருகிறூர். அந்தத் தொகைகூட மிகையெனத் தோன்றுகிறது......கம்யூனிஸம் போன்ற சர்வாதிகாரக் கொடுமைக்குப் பலாத்காரம் காரணமாகவே சீனர்கள் பணிந்திருக்க வேண்டும். மற்றப்படி அவர்கள் மனமாரப் பணிவார்களா என்பது சந்தேகம்.

“சீனக்குடும்ப கட்டுக்கோப்பைக் குலைக்கக் கம்யூனிஸ்தர்கள் முயலுகிறூர்கள். அது அவர்கள் இழைக்கும் மாபெரும் தவறுகும். பெரியோர்களிடம் பக்திபூண்டுநடப்பது சீனப்பரம்பரை. பெற்றூருக்குஎதிராகப் பிள்ளைகளை ஒற்றராகப் பழக்கும கம்யூனிஸம் அந்தப்பரம்பரைக்குப் பகையாகும். எனவே, ஆழ்ந்தகசப்பு விளைவது திண்ணம்.”

அப்பத்திரிகை இந்தச் செஞ்சீன ஆட்சியாளரைப் பின்வருமாறு எச்சரிக்கிறது :- “கொடுங்கோல் நெடுநாள் நிற்காது. சீக்கிரமோ, சற்றுப் பொறுத்தோ அது தொலைவது நிச்சயம். அதற்குஅழிவு உள்ளிருந்தோ, புறத்திருந்தோ தோன்றலாம். இருவிதமான புரட்சிக்கூறுகளும் சீனவில் இருக்கின்றன. புரட்சிஎரிமலை எப்போது வெடிக்கும் என்பதைக் காலமே கூறவல்லது. எவ்வாறிருப்பினும் இன்றைய உலகிலே ஐந்து வருடங்களுக்கு அப்புறம் என்ன நடக்குமோ தெரியாது. ஐந்துவருடங்கள் கூட அதிகப்படி. கொதிப்புற்ற மக்களின் எழுச்சிகளில் கொடுங்கோல்கள் ஒன்றின்பின் ஒன்றுய்ச் சரிந்திருப்பதை உலகவரலாற்றில் சமீபத்தில்கூடக் கண்டிருக்கிறோம். அதேபோலத் தற்போதைய நெருக்கடிக்கும் ஒரு முற்றுப்புள்ளி நிச்சயமாக உண்டு.”

## ஆசிரியர்களின் ஞானவொடுக்கம்

வருகிற மார்கழிமாதம் 9-ந் திகதி புதன்கிழமைதொடக்கம் 13-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைவரைக்கும் கொழும்புத்துறைத்தாபனத்தில் ஒரு ஞானவொடுக்கம் நடைபெறும்.

தூத்துக்குடி மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. மரியஞானம் சுவாமியவர்கள் இந்தஞானவொடுக்கத்தைப் போதிப்பார்.

இதில் பங்குபற்றவிரும்பும் ஆசிரியர்கள் நமக்கு உடனேதானே அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மடுப்பதியில் நடைபெற்ற ஞானவொடுக்கத்தில் பங்குபற்றுத ஆசிரியர் எல்லோரும், ஆங்கில ஆசிரியர்கள் உட்பட இதில்பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கிறோம்.

**T. A. J. Mathuranayagam,**
Gen. Manager, R. C. Schools.
Jaffna 9-11-53.

## அர்ச். சவேரியார் கல்லூரி மன்னர்

“ எவரோடாவது போட்டியிடுவதற்காக ஈண்டு நாம் இருப்பதில்லை. நமது ஆதீனத்திலே கத்தோலிக்க திருச்சபை விடக்கூடிய மிகப்பெரிய ஸ்தாபனங்களைப் பயன்படுத்தி இயன்றமட்டும் சிறந்தமுறையிலே நமதுமக்களுக்கும், நமதுநாட்டுக்கும் இனிதே சேவைஆற்றும் நோக்கமாக மாத்திரமே இங்குநாம்இருக்கின்றோம். அர்ச். சவேரியார் கல்லூரியானது, மாணவர்களைச் சர்வகலாசாலைக்கு ஆயத்தப்படுத்துகின்ற ஓர் கல்விக் கழகமாய் இருப்பதாலே அஃது இந்தடிஸ்திறிக்குக்கு அளிக்கக்கூடிய வசதிகளில் ஒன்று, உயர்தரக்கல்வி அவசியம் வேண்டிநிற்கின்ற பிள்ளைகளுக்குப் போக்குவரத்துச்சாதனம் அருளுவதேயாகும். இந்தடிஸ்திறிக்குக்கு ஆகக்கூடிய பட்சமான கல்விச்சேவையை அளித்து, கல்விபயிற்றுவதிலே உலகப்பிரசித்திபெற்ற கல்விமான்களான கிறிஸ்தியன்பிறதர்மாரால் நடாத்தப்படுகின்ற ஓர்கல்லூரியில் மிகச்சிறந்ததும், சித்திகரமுமான திட்டம்ஒன்றைக் கொண்டிருக்கப்பண்ணுவதற்காகவே இது செய்யப்பட்டுள்ளது ” என்று சென்ற 6-11-53 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு மன்னர், அர்ச். மரியநாயகியின் ஆலயவளவிலே புதியகல்லூரிக்கு அஸ்திவாரக்கல் நாட்டி, புதியபோக்குவரத்துச் சாதனமாகிய வானையும் ஆசீர்வதிக்கும்போது யாழ்ப்பாணமேற்றிராணியாராகிய மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவர்அவர்கள் கூறினூர்.

அவ்வேளை மன்னர் உதவிஏசன்றரும், மன்னர்க் கருமாதிகாரி (டி. ஆர். ஒ.) யும், பகுதிவித்தியாதரிசியும், இலங்கையிலே கிறிஸ்தியன் பிறதர்மாரின் சிரேஷ்டர் அதிசங். பிறதர் லியூக் அவர்களும், பலகுருமார், கிறிஸ்தியன் பிறதர்மார், கன்னியாஸ்திரீமார், ஆசிரியர், மாணவர், பெற்றூர், மற்றும் பிரபல உத்தியோகஸ்தர்களும் பெருந்திரளாகக் குழுமியிருந்தார்கள்.

அஸ்திவாரக்கல்நாட்டும் இவ்வைபவத்தைத் தொடர்ந்து மன்னர்முப்புச் சுவாமியார் அதிவண. எஸ். பீற்றர் சுவாமியவர்களும், மன்னர்ப்பட்டின சங்க தலைவர் திரு. வி. ஏ. அழகக்கோன்முதலானேரும் ஆற்றிய சொற்பொழிவிலே, இங்கு பெரியகல்லூரி ஒன்றின் அத்தியாவசியத்தை உணர்ந்து ஆவனசெய்வதையிட்டும், மன்னரைப் பலதுறைகளிலும் சிறப்பாக்கச் சித்தங்கொண்டிருப்பதையிட்டும் ஆண்டவர் அவர்களுக்கு நன்றிபாராட்டினூர்கள்.

கல்லூரிஅதிபர் அதிசங். சீசர்பிறதர் அவர்களின்முகாமையிலே மாணவர்களால்ஒலிபரப்பிமூலம் தேவதோத்திர

# சதாசகாய நாயகிக்கு அஞ்சலி

எழுசீர் விருத்தம்

(1) மதியேறு பாத கனையேக ரத்ன
மணிவன்ன தவிசில் ஏறி
நிதியேறு ரோமை நகரேறி ஆங்கு
நிலவுமத் தேயு கோவிற்
பதியேறு தாயே படிமேலுன் இன்ப
பதந்தேடு மாந்தர் பரம
கதியேற நற்ச காயத்தை நல்கு
கருணைக்கும் என்ன நிகரே!

(2) பயங்கொண்ட பால நிலைகண்டு நன்று
பலமூட்டி அன்பு காட்டி
மயங்கொண்ட செல்வ மடிமீ தமர்த்தி
மனமாற்றி மகிழ்வு கூட்டி
நயங்கொண்ட கையை நரதேவர் கையில்
நலியாது வைத்து நரகின்
செயங்கொண்ட தேவி திகழ்கின்ற உன்றன்
சிறப்பிற்கும் என்ன நிகரே!

(3) முருக்கம்பூ நாணி முகிழோடு நிற்க
முதலாய செம்மை யோங்கி
இருக்கும்நல் லாடை எழிலோடு தாங்கி
இணையற்ற பச்சை அணியில்
பெருக்கும்நற் சரிகை கரைதாங்கி யத்தைப்
பிரியாது மேனி போர்த்தி
உருக்கும்பொன் போல ஒளிகொள்உன் வதன
உயர்வுக்கும் என்ன நிகரே!

(4) இலங்கும் பசும்பொன் இழைத்தமா முடியை
இணையற்ற சென்னி சூடித்
துலங்குஞ்செங் காந்தள் கரமீது தாங்கு
சுதனுக்கும் ஒன்று சூட்டிக்
கலங்குஞ்சே யன்னர் இருகாலும் பூண்ட
கவின்பாத அணியு ளொன்று
விலங்கற்றே தொங்க வொளிர்கின்ற உன்றன்
விமலத்திற் கென்ன நிகரே!

(5) திருமாது நீயே திடமாது நீயே
திகிலுற்று அலகை அஞ்சும்
செருமாது நீயே செயமாது நீயே
செகமீது சதாச காயம்
தருமாது நீயே தயைமாது நீயே
தவழ் சென்ம மாசு சாரா
ஒருமாது நீயே யொழியாத வுன்றன்
உதவிக்கு மென்ன நிகரே!

'யுவன்'— காம்பன்

# திரிகோணமலை மேற்றிராசன ஐக்கியசங்க மகாநாடும் கத்தோலிக்க சேவையும்

இம்மகாநாடு 22-10-53 வியாழனன்று திரிதின ஆராதனைகளுடன் ஆரம்பமானது. 25-10-53 ஞாயிறன்று காலை மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்களால் திவ்வியபூசைநிறைவேறியது. தாண்டவன்வெளிக் கத்தோலிக்கசங்கம் ஐக்கியசங்க அங்கத்தினரைக் காலை விருந்தளித்து உபசரித்தது. அதன்மேல் காலை 9-30 மணிக்குச் சங்கமகாநாடு திரு. ஜோஸ். ஜே. டேவிட் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. முந்தப் பல்வேறு சேவைக்குழுவினரும் ஆற்றிய தொண்டுகள்பற்றிய அறிக்கைகள் ஆதியன சமர்ப்பிக்கப்பட்டன.

தலைவர்அவர்களது தலைமை உரையின்பின் மகாவந். மேற்றிராணியாண்டவர் தமது நல்லுரையிலே, கிறீஸ்து இராசா தமதுஇராச்சியத்தைப் பரிபாலித்து நிர்வகிக்கும் உண்மைத் திருச்சபை எதுவென்பதை நாம்கண்டு தெளியுமாறு பலஅம்சங்கள் அதனிடம் அமையப்பண்ணி உள்ளார்; அதுவே, உரோமான் கத்தோலிக்கதிருச்சபை என்னும் அதிகாரபீடம்; அதன் உண்மைஇயல்புகளை விளக்கும் முக்கியத்துவம்வாய்ந்த நான்கு அம்சங்கள்: அது ஒன்றாயிருப்பது; பரிசுத்தமாயிருப்பது; பொதுவாயிருப்பது; அப்போஸ்தலரில்நின்று தொடர்ந்து வருகிறதாய் இருப்பது; திருச்சபை பல்வேறு சாதிப்பாகுபாடுடைய நாற்பது கோடி மக்களிடையே பரவியிருந்த போதிலும் அது தன்னிலே அடக்கியுள்ள உத்தம ஒற்றுமைத்தன்மை உலகின் வேறெப்பகுதியிலும் கிடையாது; கிறீஸ்துநாதர் தமது பிரதிநிதியான பரிசுத்தபாப்பரசரிலும், அவரின் பிரதிநிதிகளாகத் திகழும் மேற்றிராணிமாரிலும், மற்றும் குருப்பிரசாதிகள், சந்நியாசர், கன்னியர், விசுவாசிகளிலும் ஒன்றித்துள்ள திருச்சபையே தன்னில் ஒப்பற்ற ஒற்றுமையும், ஏகமும்வாய்ந்து விளங்குகின்றது; பரிசுத்தபாப்பரசர் தமது பிரதிநிதிகளாகிய மேற்றிராணிமார்மூலம் இன்று கோருவதென்ன? போலாந்து, சீனு, ருஷியா முதலாம்நாடுகளிலே பொதுவுடமை ஆட்சியக்காரரால் கருதினல்மார், மேற்றிராணிமார், குருமார், விசுவாசிகள் கொலைசெய்யப்பட்டும், சிறைவைக்கப்பட்டும், நஞ்சூட்டப்பட்டும், சொத்துச்சுதந்திரங்கள் சூறையாடப்பட்டும, நாடுகடத்தப்பட்டும், கோவில்கள், கலைக்கழகங்கள் ஆதியன அழிக்கப்பட்டும், இன்னோரன்ன துன்பங்கள் இழைக்கப்பட்டு வருகின்றன. இத்துன்பங்களினின்று அவர்கள் விடுதலைபெறுமாறு கத்தோலிக்கராகிய நாம்—பிறர்சிநேகத்தின் குறிக்கோளாகிய நாம்—ஒற்றுமைத்தன்மையுடைய நாம் இடையறாது அவர்களுக்காகச் செபிக்கவேண்டும்; நாமும் ஒருவேளை இதேநிலைமையைச் சுவைக்க நேரிடலாம்; அவ்வாறுநேரிடின் நமது துன்பந்தடைக்கப் பிறரை எதிர்நோக்குவோம்; ஆதலின் நாம் எலவே இந்த உதவியைப் புரிந்தாகவேண்டும்;. மகமதியர், யூதர் என்னும் சாகியத்தாரிடையே விளங்கும் ஒற்றுமைத்தன்மை—தம் இனத்துக்கு நேரும் இன்னல்களைக் களைந்தெறிவதிற் கொள்ளும் ஆர்வம்மலிந்த ஐக்கியத்தன்மை நம்மில பன்மடங்காய்க் காணப்படவேண்டும்; அதனல் இத்துன்பச்சூறையிற் சுழலும் அன்பின்மக்கள் அமைதிநிலையைக்கூடியவரையச் செபிப்பதோடு அமையாது நற்கிரிகைகளைச் செய்து சாதனையிற்காட்டவேண்டுமெனக்கூறி ஆர்வமும், இரக்கமும்நிறைந்த உள்ளத்தினராய் ஐக்கியசங்கத்தைத் தூண்டி யாவரையும் வேண்டிநின்றார்.

பின்னர், கத்தோலிக்கசேவா முதன்மைத்தலைவர் வண. எவ். ஒ. தம்பிமுத்து சுவாமியவர்கள் பேசியபோது: பிறெடறிக் ஓசானம்அவர்கள் கத்தோலிக்கசேவை எதுவென்பதை — சென்வின்சென்ற் டீ போல் தருமசபைக்கு அடிகோலி வைத்ததிலிருந்து ஒருவர் பிறர்நலங்கருதிப் புரியுந்தொண்டு என்பதைக் காட்டியுள்ளார்; ஆதலின் வாரந்தோறும அயராது சோராது ஆசையோடு சேவைபுரிவோரே உண்மைச் சேவைபுரிவோராவர்; எதிரேவரும்ஆண்டில் இவ்வித நற்பணியை நான் அவாவுகிறேனெனக் கூறினர்.

அதன்மேல் மத பொதுஸ்தாபனங்களால் நடைபெறும் கல்விமுறைக்கும் அத்தாபனங்களிற் கலைபயிலும் மாணவர்கட்கும் இடையூறுவிளைக்கும் முகமாகக் கல்விப்பகுதியார் உயர்தரக் கலாசாலைகளை (எச். எஸ். சி. வகுப்பு) அமைப்பதில் பிரதேசவாரியாய் அமைக்கும் புதியதிட்டமானது மதஸ்தாபனங்களால் நடத்தப்பெறும் முறையை வேரோடழிக்கின்றதாதலின் அதனை எதிர்த்துநிற்பதோடு பிரதேசவாரிநீக்கி மதஸ்தாபனவாரியாய் நடைபெறும் முறை கைக்கொள்ளப்படவேண்டும் என்னும் அம்சம்நிறைந்த பிரேரணை திரு. எஸ். எஸ். சவரிராஜா அவர்களால் பிரேரிக்கப்பட்டு ஏகமனதாய் அரங்கேறியது.

பின்னர் புதியஆண்டின் உத்தியோகஸ்தர்கள் பின்வருமாறு தெரியப்பெற்றார்கள். தலைவர், திரு. ஜோஸ். ஜே. டேவிட்—உபதலைவர்கள், திரு. ஜே. எல். நிசைவீரசிங்கம், திரு. எம். பெனடிக்ற்; திரு. ஜே. தோமஸ் — காரியதரிசி, திரு. கே. எல். இராசேந்திரம்— உபகாரியதரிசி, திரு. ஐ. பற்றிக் — தனுதிகாரி, திரு. கே. ஆர். அகுஸ்தீன்.

பின்பு அன்றுமாலை வாத்தியங்கள் முழங்கப் புளியந்தீவு, புளியடிக்குடா என்னும் இருபங்குகளிலுமிருந்து கலாசாலை மாணவர்மாணவிகளும், விசுவாசிகளும், குருமார், சந்நியாசர், கன்னியர்களும் பகிரங்கவீதிகளினூடே பவனிசென்று தாண்டவன்வெளி அர்ச். வியாகுலமாதா ஆலயமுன்றிலில் நின்ற இராசகுரவர் மகாவந். மேற்றிராணியாண்டவருக்குத் தமது விசுவாசபிரமாணிக்கத்தைத் தெரிவித்ததும் அவரால் அளிக்கப்பட்ட திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்தோடும், கிறீஸ்த வாலிப குழுவினரால் நடத்தப்பட்ட "பலித்த கனவு" என்னும்நாடகத்தோடும் மகாநாடு நிறைவெய்தியது.

— காரியதரிசி

---

தேங்கள் பாடப்பட்டன. பின்னர்நடைபெற்ற தேகாப்பியாசக் காட்சிகளின் போது கூர்ந்திக் கட்டடவடிவங்கள் மிகவும் விநோதமாகக் கட்டிக் காண்பிக்கப்பட்டன. அதன்மேல் பலராலும் பிரதிமைப்படங்கள் பிடிக்கப்பட்டபின் தோட்டோபசாணையுடனும், கலந்துரையாடலுடனும் வைபவம் முடிபெய்திற்று.

இக்கல்லூரி ஆசிரியர்களில் ஒருவரான திரு. சி. எல். செபஸ்ரியன், பி.ஏ. அவர்களின் 25 வருடகால ஆசிரியத் தொண்டின் வெள்ளிவிழாவை ஓர் சந்தர்ப்பமாகக்கொண்டு நாளை நின்றுவரும் 14-ந் திகதி சனிக்கிழமையன்று இக்கல்லூரியின் வருடாந்த பந்தயவிளையாட்டுப் போட்டி விமரிசையாக நடந்தேறும். அதற்கு மன்னார்ப்பட்டினசங்கத்தலைவர் திரு. வி. ஏ. அழகக்கோன், ஜே. பி. அவர்கள் தலைமைவகிப்பார். போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு யூபிலிநாயகரே பரிசில்கள் வழங்குவார். அன்றிரவு யோசேவாஸ் முனிவர் சரித்திரம் ஓர் நாடகமாக ஆங்கிலத்திலும், தமிழிலும் நடித்துக்காண்பிக்கப்படும்.

— நிருபர்

## நான்கு ஆசனக்கோவில்கள்

ஓர்காலத்திலே செல்வவளம் பொருந்தியதாய், அராபியச் சக்கிராதிபத்தியத்தின் பிரஸ்தாபம்பெற்ற தலைப்பட்டணமாய் விளங்கிய பாக்டாட் நகரில் வாழ்ந்துவருகின்ற நாற்பதினாயிரம் கத்தோலிக்க மக்களும் தங்கள்மத்தியிலே நான்குமேற்றிராசனக்கோவில்களையும், மற்றும்பதினொன்றுகோவில்கள், சிற்றாலயங்களையும் கொண்டிருந்த போதிலும் இவைகள் அவர்களுக்கு இன்னுமே போதியனவாயில்லை. சால்டிய, சீரிய, ஆர்மீனிய, லத்தீனிய திருச்சடங்காசார மேற்றிராசனக் கோவில்களாகிய நான்கும் அந்நகரின்மத்தியிலே அழகிற்சிறந்த அநேக பள்ளிவாசல்களிடையே ஒன்றுக்கொன்று சமீபமாக நெருங்கியிருக்கின்றன. ஏனைய கோவில்களும், சிற்றாலயங்களும் மிகச்சிறியனவாய்த் தூரத்தூர இருக்கின்றன. இன்று பாக்டாட்நகர் ஈராக்நாட்டின் தலைப்பட்டணமாய் இருந்துவருகின்றது.

## தேவதாயாரின் திருநிவாசம்

எபேசுஸ்நகரிலே தேவதாயார் வசித்திருந்த திருஇல்லத்தைத் தரிசிக்கிறவர்களுக்கெல்லாம் பரிசுத்தஸ்தானம் ஒருபரிபூரணபலனை அளித்திருக்கின்றது. இது ஏழுவருடகாலமட்டும் அடைந்துகொள்ளக் கூடியதாகும். இந்தஇல்லம் அமைந்திருந்த பேரானஇடத்திலே ஓர் புராதனகோவில் இருந்துவருகிறது. இந்தஇடத்திலிருந்து தான் தேவதாயார் பரலோகத்துக்கு ஆரோபணமானுர்என்று பாரம்பரியம்ஒன்று கூறுகின்றது. ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும் தேவதாயாரின் திருநாட்களிலும், வைகாசிமாதத்தில் ஒவ்வொருநாளும் இச்சப்பரிபூரண பலனை அடைந்துகொள்ளலாம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் இரக்கத்தாலும், அர்ச். சூசையப்பருடையவும், சந்தானுன்மாதாவுடையவும், சகலஅர்ச்சியசிஷ்டர்களுடையவும் மன்றாட்டாலும் என்மகனுக்குவந்த ஆபத்தானநோய் சத்திரசிகிச்சைசெய்து இப்போது சுகம். இன்னும் பூரணசுகம் கிடைக்கும்படி மன்றாடி என் நன்றியைத் தெரிவிக்கிறேன். இவர்கள்நாமம் என்றும் எங்கும் புகழப்படுவதாக.

யோ. கே. அ.



# பாலர் பக்கம்





## அண்ணு சொல்வது :

அருமைச் சகோதரங்களே !

உங்கள் எல்லோருக்கும் துவிச் சக்கர வண்டியில் மெத்த விருப்பம் அல்லவா? ஒன்று வைத்திருக்கத்தான் வேண்டும் என்று துடியாய்த் துடிப்பீர்கள் அல்லவா? என்ன இது விளங்க வில்லையா? கடுஞ் சொல்லா? பயப்பட வேண்டாம். அதுதான் நீங்கள் ஏறி ஓடுகின்ற சைக்கிள்.

உங்களிற் சிலர் சைக்கிளில் தான் பாடசாலைக்குச் செல்லுகிறீர்கள். பெண்கள்கூடச் சைக்கிள் ஓடுகிற காலம் அல்லவா இது? சைக்கிள் நன்ருய் ஓட வேண்டும் என்றால் றப்பர் சில்லிலே காற்று நிறைந்திருக்க வேண்டும். "கிறீஸ்" என்று சொல்லப் படுகிற கொழுப்பும் போட்டிருக்க வேண்டும். காற்றும், கொழுப்பும் இல்லாவிட்டால் சைக்கிள் சரியாக உருளாது. உருளா விட்டால் ஏறி ஓட முடியாது. இடையிடையே சில்லுகளின் நிலையைப் பார்த்துக் காற்று அடிக்க வேண்டும். கொழுப்பும் பூச வேண்டும்.

எங்கள் ஆத்துமமும் அதுபோலத்தான் என்று சொல்லலாம். தேவ வரப்பிரசாதமும் காற்றைப் போலத்தான். தேவ வரப்பிரசாதம் இருந்தால்தான் பாவச் சோதனைகளை நாம் விலக்கலாம். அல்லாவிடில் பாவத்தில் விழுந்து விடுவோம்.

அடிக்கடி காற்று ஏற்றுவது போல, எங்கள் ஆத்துமத்துக்குத் தேவ வரப்பிரசாதம் அதிகம் அடைய வேண்டும். ஒரு முறை காற்று அடித்து விட்டுச் சைக்கிள் எப்போதும் ஓடினல், கரடு முரடான பதையும், எங்கள் பாரமும் காற்றைக் குறைத்து விடும். ஞானஸ்நானத்தில் கிடைத்த வரப்பிரசாதம் எங்களைச் சீவியகாலம் முழுவதும் அர்ச்சிக்க மாட்டாது. சைக்கிள் ஓடுகிற பொழுது காற்று அடிக்க முடியாது. சோதனை வேளையில் தேவ வரப்பிரசாதத்தைத் தேடிப்போக முடியாது. ஏற்கனவே தைரியம் தேட வேண்டும்.

ஆகையால், உங்கள் ஆத்துமத்தை அடிக்கடி சோதித்தும், பச்சாத் தாபத்தாலும், நற் கருணையாலும் வேண்டிய வரப்பிரசாதங்களை ஆத்துமத்துக்குத் தேடியும் கொள்ளுங்கள். சுபம் !

உங்கள் அன்புள்ள
அண்ணு

## மின்மினி

'ஜெயம்'

1

தங்கத் துகளெனத் தொங்கிக் கிடந்திங்கு
தண்ணொளி தந்திடும் மின்மினிதான்
பொங்கும் மழையிருள் போக்குதற் காய்இந்தப்
பூமியில் வைத்த விளக்குகளோ ?

2

மாலைக்கால மென்ற மங்கையர் கூந்தலின்
மல்லிகைக் கொத்துச் சிதறியதால்
சோலைக்குள் எங்கணும் சிந்திக் கிடக்குதோ
சுந்தர மின்மினிக் குஞ்சுகளாய்

3

வானத்துத் தாரகை வாஞ்சையினல் இங்கு
வாடித் துடித்திடும் பாலருக்காய்
மேனிக்குப் பொன்னொளி பூசிஇப் பூச்சியை
மேதினிக் கீசன் அளித்தனரோ ?

4

மின்னிமின் னிஒளி வீசித் திரிகின்ற
மின்மினி தான்இந்தப் பூவுலகில்
புன்னகை யோடுதான் போதிக்க வந்திட்ட
புத்தி மதிகளை யாரறிவார் ?

## ஆசையால் வந்தமோசம்

ஆனந்தன் பேராசை பிடித்தவன். பணம், பணம் என்றே நாள் முழுதும் கானம்பாடுவான். ஒருநாள் அவனிடம் ஒரு கமக்காரன் ஒரு பசுவைக் காட்டி: "நண்பா, இது உனக்கு நல்ல விதமாகப் பணம் சம்பாதித்துத் தரும்; ஒரு நாளைக்கு ஒருமுட்டி தப்பாது" என்று கூறினன். அப்போது ஆனந்தன்: "அது என்ன விலை" என்று அவனைக் கேட்டான். கமக்காரன் நூறு ரூபா என்று கூறினன்.

இதைக் கேட்டதும் ஒருநாளைக்குக் கால்ரூபா செலவழித்து அறியாத ஆனந்தன் திகைத்தான். அதைக் கவனித்த கமக்காரன்: "நீ வாங்காது போனல் போய்விடு" என்று கூறிச் சென்று விட்டான்.

அன்று இரவு முழுவதும் ஆனந்தனுக்குத் தூக்கம் வரவில்லை. சிந்தனை முழுவதும் அந்தப்பசுவின் மேல் தான். "ஆம், நாள் ஒன்றுக்கு ஒரு முட்டி தப்பாது என்று சொன்னது யாருக்கும் ஆச்சரியந் தானே; ஒரு முட்டி பால் இரண்டு ரூபா; ஆகவே, ஐம்பது நாளில் உழைத்து விடலாம்" என்று எண்ணி அடுத்த நாள் கமக்காரனின் வீட்டுக்குச் சென்று நூறு ரூபாவையும் அவிழ்த்துக் கொடுத்துப் பசுவை வாங்கி வீட்டுக்குக் கொண்டு சென்றதும் நேரே கடைக்குச் சென்று ஒரு முட்டி வாங்கினன். மறுநாள் காலை முட்டியுடன் பால் கறக்கச்சென்றான். பசு முர்க்க குணமுள்ளது. பால் கறந்து கொண்டு இருக்கும்போது பின்னங் கால்களால் அடித்து முட்டியை உடைத்து விட்டது.

அதனுல் ஆனந்தன் அடுத்த நாளும் ஒரு முட்டி வாங்கிப் பால் கறந்தான் – அன்றும் பசு முட்டியை உடைத்தது. தினமும் இப்படியே செய்தது. உடனே அவன் மனம் வருந்திக் கமக்காரனின் வீட்டிற்குச் சென்றான். அங்கு கமக்காரனைக் காணவில்லை. அதனுல் வீட்டிற்குத் திரும்பினன். அங்கு போய்ப் பார்த்தபோது வீட்டிலுள்ள பணம், வாங்கிய பசு ஒன்றையும் காணவில்லை. உடனே அவன் ஏக்கம் கொண்டு அறிவற்று விழுந்தான். அவன் கொண்ட பேராசையும் அன்றோடு ஒழிந்துவிட்டது.

வி. பிரான்சிஸ்
மன்னர்

## அர்ச். சிலுவைச் சின்னப்பர்

ஏறக்குறைய 250 ஆண்டுகளுக்கு முன் இருவாலிபர் ஓர் ஆற்றங்கரை நீளம் உலாத்திக் கொண்டு சென்றனர். போல், ஜோன் என்பன அவர்களின் நாமங்கள். அப்போது அவர்களில் ஒருவர் சறுக்கிச் சறுக்கி ஓடிக்கொண்டிருந்த நதியில் விழுந்தார். அத்தருணம் மற்றவர் விழுந்தவரைக் கரையேற்றப் போனர். பாவம், அவரும் அந்தச் சுழியில் அகப்பட்டுவிழுந்தார். இருசகோதரரும் தங்களுக்கு உதவி செய்ய யாராவது வருவார்கள் என்று நினைத்து உரத்துச் சப்தம் இட்டார்கள். ஆனல், அங்கு ஒருவரும் நிற்கவில்லை. இருவரும் ஒருதடவை ஆற்றில் மூழ்கி எழும்போது ஓர் அழகான பெண்மணி அவர்களைத் தண்ணீரில் இருந்து தூக்கி வெளியேற்றிவிட்டார். அவ யார் தெரியுமா? அவதான் எங்கள் தேவதாயார். இருசகோதரரும் இச்சம்பவத்தை மறந்துவிடவில்லை. ஒருபோதும் நன்றிமறக்கவுமில்லை. தங்கள் சீவியகாலம் முழுவதும் தேவதாயாரில் ஆழமானபக்தி வைத்தார்கள். பின்பு இருவரும் குருமார் ஆயினர். அவர்களில் ஒருவர்தான் அர்ச். பாவுலுவானவர். ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருமார்சபையை அடியிட்டவர் இவரே.

இன்று நாங்கள் இவரை அர்ச். சிலுவைச் சின்னப்பர் என்று சங்கை செய்கிறோம்.

ஆர். சேபமாலை
முல்லைத்தீவு

## மாலையில்

1

மாலையிற் சூரியன் ஆழ்ந்திடும்
மையிருள் பூமியிற் சூழ்ந்திடும்
சோலையிற் புள்ளினஞ் சேர்ந்திடும்
சுந்தரப் பூவினஞ் சோர்ந்திடும்

2

மாமதி வானகம் நீந்திடும்
மாளிகை தீபங்கள் ஏந்திடும்
தேமலர் முல்லையும் அல்லியும்
தேசுடன் நன்மணம் ஈந்திடும்

3

பாரினிற் சாந்தியும் ஓங்கிடும்
பக்தர்கள் பண்ணொலி தேங்கிடும்
ஆருயிர் யாவுமே தூங்கிடும்
அல்லல்கள் பூவினில் நீங்கிடும்

"போன்"

## நான் யார் ?

1. நான் சாகும் தருவாயில் இருந்தேன். பிசாசு என்னைச் சோதிக்க வந்தது. அந்தப் பிசாசைத் துரத்தும்படி தேவதாயார் என் காவற் சம்மனசானவருக்குச் சொன்னர். சடுதிமரணம் வாராமல் தற்காக்கும்படி என்னை மன்றுடுகிறீர்கள்.

* * *

2. நான் ஆர்ஸ்பட்டணத்தவர். பதினைந்துவயதில் ருேமைப் பட்டாளத்தில் சேர்ந்தேன். பின் ஒரு பிரபல மேற்றிராணியார் ஆனேன். முற்காலம் கல்வியாளன் என்று அறியப்பட்ட பிரான்ஸ் தேசத்தை மனந்திருப்ப வெகு பிரயாசப்பட்டேன்.

1. 'அர்ச். ஜெரார்ட் மஜெல்லா'
2. 'அர்ச். வியான்னி'

— எம். ஜே. எம்.

## இந்தத் தலம்

ஐந்துஎழுத்துகளாலானது

1. முதல் மூன்று எழுத்துகளும் ஐ நிலங்களில் ஒன்றைக் குறிக்கும்— அன்றேல் ஒரு மரத்தைக் குறிக்கும்.

2. முதல் எழுத்தும், கடைசி எழுத்தும்—அன்றேல் கடைசி எழுத்துகள் இரண்டும் நீர்நிலையைக் குறிக்கும்.

3. மூன்றும், நாலாம் எழுத்துகள் 'தமயந்தி' யின் முதல் இரு எழுத்துகளுமாகும்.

4. மூன்றும், ஐந்தாம் எழுத்துகள் தடு என்று சொல்லும்.

5. முதல் இரண்டு எழுத்துகளும் ஓர் வாசனைப்புல்லின் முதல்இரண்டு எழுத்துகளாகும்.

6. முதலாம், மூன்றும் எழுத்துகளைச் சேர்த்தால்—பானை, —வழிபாடு என்பவற்றிலே கீறிட்ட இடங்களில் பொருந்தும் சொற்களைக் குறிக்கும். கண்டுபிடியுங்கள்.

— G. A. G.

பாலர்பக்கத் தொடர்ச்சி

## • செபமாலை நாயகியின் பாலர் பிரெசீடியம்

சலாப மேற்றிராசனக் கோயிலின் ஓர் கிளையாகிய செபமாலை நாயகியின் பாலர் பிரெசீடியம் சலாபத் தமிழ் ஆண்பாடசாலையில் 29-9-53-இல் திருத்தி அமைக்கப்பட்டு அதிவண. பி. சி. பெர்னண்டோப்பிள்ளை சுவாமியவர்கள் ஞானஅதிகாரியாகவும், சங். பிறதர் பிரான்சிஸ் சேவியர் பதில்ஞான அதிகாரியாகவும், ஆசிரியர் எம். வி. பெறேறு சபைத்தலைவராகவும், ஆசிரியர் எஸ். ஏ. பெர்னண்டோ உபதலைவராகவும், திரு. டப்ளியு. பவுலிஸ் பெர்னண்டோ காரியதரிசியாகவும், சகோதரர் பி. வி. பிரான்சிஸ் தனாதிகாரியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். பிரெசீடியம் 12 அங்கத்தவர்களுடன் ஆரம்பமாகி அன்றுமுதல் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை சாயந்தரமும் தவறாது நடைபெற்று வருகிறது. இப்பிரெசீடியத்தின் மூலமாய்ச் "சத்தியவேத பாதுகாவலன்" 35 பிரதிகள் கத்தோலிக்க தமிழ்மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதனால் எம்பாடசாலை மட்டுமன்றி, எமது நகரிலுள்ள கத்தோலிக்க மக்களும் நன்மை அடைந்து வருகின்றார்கள்.

ஆசிரியர்
எம். வி. பெறேறு

## யேசு நம்மோடு

1
யேசுவே! பீடத்தின் மேலே
சித்திரப் பேழையுள் நீரே
வாசம் புரிவதும் ஏனோ?
வாஞ்சையின் மீதியி னாலோ?

2
மின்னும் விளக்கொளி அன்றி
மேதினி மேல்துணை யின்றி
தன்னந் தனியனாய்த் தம்மைத்
தங்கிட வைத்தவர் யாரோ?

3
அனுதினம் வந்துமைக் காண
ஆவலாய் இருக்கிறோம் நாமே
எமதுளம் உடல்பொருள் ஆவி
எல்லாம் உமக்களிப் போமே

4
பாலர்கள் எங்களை அன்றோ
பாசத்தோ டேஅழைக் கின்றீர்
காலையும் மாலையுந் தேடிக்
கர்த்தனே! நாம் வருவோமே

சிறுமி கார்மேல் மடோனு
அர்ச். அன்னம்மாள் பாடசாலை
மேட்டுத்தெரு, கொழும்பு.

## நேர்மை மேன்மைதரும்

ஓர் ஊரில் ஒரு அரசன் இருந்தான். அவன் தெய்வ பக்தி உள்ளவன். ஒருநாள் அவன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். அங்கு வேட்டையாடியபிறகு அவன் மிகுந்த களையோடு ஒரு மரத்தின் அடியில் சென்று உட்கார்ந்து கொஞ்சம் தண்ணீர் குடிக்கப் போகும் பொழுது: "ஐயா! ஏழை, தண்ணீர், தண்ணீர்" என்ற ஒரு சப்தம் அவன் காதில் விழுந்தது. உடனே அரசன் பின்புறம் திரும்பிப் பார்த்தான். ஐயோ! பாவம், ஒரு ஏழை எலும்பும் தோலுமாய் நிற்கக் கண்டான். உடனே அவன் அந்த ஏழைக்குத் தான் குடிக்கவிருந்த தண்ணீரைக் கொடுத்தான். பின்பு அவனைத் தனது அரமனைக்கு அழைத்துச் சென்றான். சில நாட்கள் சென்றபின் அரசன் அவனுக்குத் தனது மாளிகையிலே ஓர் நல்ல வேலை கொடுக்க எண்ணி ஓர் பரிசோதனை நடத்தினான். ஒருநாள் அரசன் தனது விலையுயர்ந்த பொருட்களை அவன் காணக்கூடிய ஓர் இடத்திலே

## உத்தரிக்கிற ஸ்தலத்துக்குத் தண்ணீர்

ஒருநாள் நான்குபிள்ளைகள் ஒருங்கே விளையாடும்போது உத்தரிக்கிற ஸ்தலத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அன்றுகாலை பூசையின்போது குருவானவர் உத்தரிக்கிற ஸ்தலத்தைப் பற்றிப் பிரசங்கஞ்செய்திருந்தார். வீட்டிலும் அவர்களுடைய தாய் உத்தரிக்கிற ஆத்துமங்கள்படும் அகோர வேதனைகளைப்பற்றி எடுத்துக்கூறினாள். "நான் அவ்வளவு தூரத்துக்கும் நடந்துபோகக்கூடுமாயிருந்தால் நிறையத் தண்ணீர் கொண்டுபோய் உத்தரிக்கிற ஸ்தல நெருப்பை அணைத்துவிட்டு வருவேன்" என்று அவர்களில் இளையவளான மேரி கூறினாள். அதைக்கேட்டதே பிள்ளைகள் யாவரும் நகைத்து மேரியைக் கேலிசெய்தார்கள். ஏனெனில், அந்தநெருப்பை அணைப்பது முடியாத காரியம்.

ஆனால், அவர்களுடைய சம்பாஷணையைக்கேட்டுக்கொண்டிருந்த தாய்: "மேரியைக் கேலிசெய்யவேண்டாம்; உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு உதவி செய்ய அவள் விரும்புகிறாள்; செய்து கொண்ட பாவத்துக்காகத் தண்டிக்கும் கடவுள் அந்த நெருப்பை உண்டாக்கியிருக்கிறார்; அதை நம்மால் அணைக்க முடியாது; சகலபாவங்களும் தண்டிக்கப்பட்டு முடியும்வரை அந்தநெருப்பில் எரிந்தாகவேண்டும்; பூமியில் இருக்கிற நாம் நமது செபங்களாலும், பரித்தியாகங்களாலும் அவர்களின் வேதனைகளைக் குறைக்கலாம்; சீக்கிரம் அவர்கள் நெருப்பினின்று தப்பிக்கொள்ளும்படி செய்யலாம்; நீர்ஊற்றி ஒருவிதத்தில் அந்தநெருப்பை அணைக்கலாம்; மேரியைப்போல இந்தக்கார்த்திகைமாதத்தில் உத்தரிக்கிற ஸ்தலத்துக்குத் தண்ணீர் எடுத்துச்செல்ல யாருக்குப் பிரியம்?" என்றாள். "எனக்கு, எனக்கு" என்று நால்வரும் கைகளை உயர்த்தினார்கள்.

பிறகு அந்த நல்லதாய் ஒவ்வோர் பிள்ளைக்கும் வெவ்வேறு நிறத்திலே முப்பது கடுதாசித்துண்டுகள் கொடுத்து, "ஒவ்வோர் துண்டும் கார்த்திகை மாதத்தின் ஒவ்வொருநாளைக் குறிக்கிறது; உத்தரிக்கிற ஆத்துமங்களுக்காகச் செபமோ பரித்தியாகமோ செய்கிறவர்கள், மாலையில் அதையெல்லாம் கடுதாசியில் எழுதி இந்தச்சாடியில் போடவேண்டும்; ஒவ்வொருவரும் உத்தரிக்கிற ஸ்தலத்துக்கு எவ்வளவு தண்ணீர் எடுத்துப் போயிருக்கிறார்கள் என்பதை மாதக்கடைசியிலே நாம் பார்க்கலாம்" என்றாள்.

கார்த்திகைமாதம் முடிந்தது. தாய் சாடியை எடுத்துப் பார்த்தாள். உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு ஆறுதலாகத் திவ்வியகர்த்தர் கற்பித்த செபம், திவ்விய பூசைகள், திவ்விய நன்மைகள், மனவல்லயச் செபங்கள், சிறுசிறு பரித்தியாகங்கள், சிறு பிறர்சிநேகக் கிரியைகள், புண்ணியமுயற்சிகள் ஆகியவற்றை தனதுமக்கள் ஏராளமாகச் செய்திருந்ததைக் கண்ட அந்த நல்லதாய் மகிழ்ந்து, பத்தியுள்ள பிள்ளைகளைத் தனக்குத் தந்த கடவுளுக்கு நன்றிசெலுத்தினாள்.

ச. ஞா.

## பாக்கியவாளர்

1. மனத் தரித்திரர் பாக்கியவாளர். ஏனெனில், அவர்களே கச்சேரிகளின் கைலஞ்ச ஊழல்களைத் திருத்துவார்கள்.
2. தாழ்மை உள்ளவர்கள் பாக்கியவாளர். ஏனெனில், நற்புத்திமதிக்குச் செவி சாய்ப்பார்கள்.
3. யோசிப்பவர்கள் பாக்கியவாளர். ஏனெனில், நற்புத்திமதியால் பலன் அடைவார்கள்.
4. பிரமாணிக்கத்துக்குப் பகிதாகப் படுகிறவர்கள் பாக்கியவாளர். ஏனெனில், அவர்கள் தேசத்தைப் பாதுகாப்பார்கள்.
5. கட்டுமட்டாய்ச் செலவழிக்கிறவர்கள் பாக்கியவாளர். ஏனெனில், அவர்கள் வரியைக் குறைப்பார்கள்.
6. சொற்ப வார்த்தைக்காரர் பாக்கியவாளர். ஏனெனில், அவர்கள் கருமங்களை நிறைவேற்றுவார்கள்.
7. நற்கொள்கையைக் கடைப் பிடிக்கிறவர்கள் பாக்கியவாளர். ஏனெனில், தனிப்பட்டவரின் நன்மைக்காகப் பொதுநன்மையைக் கைவிடார்கள்.
8. கட்சியால் வரும் கஷ்டத்தைப் பாராமல் நீதியைக் கடைப் பிடிக்கிறவர்கள் பாக்கியவாளர். ஏனெனில், நாட்டின் பிற்காலம் அவர்களிலேயே தங்கியிருக்கிறது.

— M. J M.

பிரசித்தமாக வைத்து அவற்றைப் பாதுகாக்கும்படி சொல்லிவிட்டுப் பயணமானான். சிலநாட்கள் கழித்து அவன் திரும்ப வந்து பார்த்த பொழுது அவைகள் அனைத்தும் அந்தப்படியே வைத்த இடத்தில் பத்திரமாக இருக்கக் கண்டு அவனுடைய நேர்மையைப் பாராட்டித் தனது மாளிகையிலே அவனுக்கு ஓர் நல்ல வேலை கொடுத்தான். அவனும் நன்றிகூறி அரசனுக்கு வணக்கம் செய்தான்.

S. தம்பிராசா
கிறீஸ்துராசா பாடசாலை,
முருங்கன்.

## பொழுதுபோக்கு

விருந்தினன் — இந்தச் சூப்பைக் குடிக்க என்னால் முடியாது.
வேலைக்காரன் — பொறுத்துக் கொள்ளும் ஐயா; நான் மனேஜரைக் கூட்டி வருகிறேன்.
விருந். — மிஸ்றர் மனேஜர்! இந்தச் சூப்பை என்னால் குடிக்க முடியாது.
மனேஜர் — பொறுத்துக் கொள்ளும்; நான் முதலாளியைக் கூப்பிடுகிறேன்.
விருந். — மிஸ்றர்! என்னால் இந்தச் சூப்பைக் குடிக்க முடியாது.
முதலாளி — ஏன்? அதில் என்ன குறை இருக்கிறது.
விருந். — ஒன்றுமில்லை; என்னிடம் கரண்டி இல்லை.

* * *

வகுப்பு மாணவர்களுள் ஒருவனின் தாய் அவனுடைய ஆசிரியருக்கு ஓர் கடிதம் அனுப்பியிருந்தாள். அதிலே பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

"அருமையான ஆசிரியரே! தயவு செய்து இனிமேல் வில்லிக்கு வீட்டுக் கணக்குக் கொடுக்கவேண்டாம். உங்கள் மைதானத்தைச் சூழவிருக்கும் வீதியை ஓர்மனிதன் ஐம்பதுமுறை சுற்றிநடக்க எவ்வளவு நேரம் செல்லும்என்று தாங்கள் கொடுத்தகணக்கு அவனுடைய தகப்பனுக்கு ஒருநாள் வேலைக்குத் துண்டு விழுத்திவிட்டது. அவர் அவ்வீதியைச்சுற்றி ஐம்பதுமுறைநடந்து நேரத்தைக் கணக்குப் பார்த்துக் கொடுத்தபோதும் அதுபிழையென்று நீங்கள் வட்டம்போட்டு விட்டீர்கள்."

## அறிவுச்சுடர்

1. அப்போஸ்தலர்களின் கல்லறைகளிலே எவரெவரின் கல்லறைகள் கண்டறியப்பட்டவைகள்?

அர்ச். தோமையார், அர்ச். இராயப்பர், அர்ச். சின்னப்பர் எனும்மூவரினதும் கல்லறைகளே. மற்றவர்களின் கல்லறைகள் இன்னுமே கண்டறியப்படவில்லை.

2. கருதினால் திசறாண் ஆண்டவர் இந்தியாவுக்குக் கொண்டுவரும் இந்திய அப்போஸ்தலரான அர்ச். தோமையாரின் திருப்பண்டங்களைப் பூச்சியமாகவைத்துப் பாதுகாக்கும் அதிர்ஷ்டம் யாருக்குக் கிடைக்கவிருக்கிறது?

மலையாள (எர்ணாக்குளம்)க் கத்தோலிக்கருக்கே.

3. உலகில் 120 சிறு தீவுகளில் அமைந்துள்ள பெரியகடற்துறைமுகம் எது?

இத்தாலியின் வடகிழக்குப் பாகத்திலுள்ள வெனிஸ் துறைமுகமே. 400 பாலங்களால் இணைக்கப்பட்ட சுமார் 170 கால்வாய்கள் அங்கு வீதிகளாக உபயோகமாகின்றன. தூண்கால்களில் தான் அங்குவீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய இரண்டரை மைல் நீளமான பாலமொன்று இந்தக் கடற்துறைமுகத்தையும், இத்தாலிய நாட்டையும் இணைக்கின்றது.

4. இப்பரந்தபூமியின் கடற்தண்ணீரிலுள்ள சாதாரணஉப்புமுழுவதையும் காய்ச்சித்திரட்டிஎடுத்தால் எவ்வளவுஇருக்கும்?

பூமியின் தரைப்பாகம் முழுவதையும் 110 அடிஉயரத்துக்கு எழுப்பிவிடக்கூடிய அவ்வளவு பெருந்தொகையாய் இருக்கும்.

5. கோறியாவிலே கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பைத் தடுத்துநிறுத்திவைக்குமாறு எத்தனைபேர் தங்கள்உயிரைத் தியாகஞ்செய்திருக்கிறார்கள்?

17 சுதந்திர நாடுகளைச் சேர்ந்த 70,000 ஆடவர்கள் தங்கள் உயிரைத் தியாகஞ்செய்திருக்கிறார்கள்.

6. தமது இருகரங்களையும் அரவணைக்கும்பாவனையாக நீட்டியபடியே அமைந்துள்ள நமதுஇரட்சகரின் 26 அடிஉயரமான திருச்சுரூபம் எங்கே இருக்கின்றது?

ஸ்பெயினிலே பார்சலோனாநகருக்குச்சமீபமான ரிபிடாபோ குன்றின் உச்சியிலுள்ள அழகியபெரிய ஆலயத்தின் முற்புறமாக இருக்கின்றது.

7. சமுத்திரங்களிலே அதிகம்ஆழமான இடங்கள் எப்போதும் எங்கே இருக்கின்றன?

கரையை அடுத்துத்தான் இருக்கின்றன. சமுத்திரங்கள் எல்லாவற்றிலும் மிகவும் ஆழமான இடம் பசிபிக்சமுத்திரத்திலே பிலிப்பைன்ஸ் தீவுகளிலுள்ள மின்டனேவோவின் கிழக்குப் புறத்தின்பக்கமாக இருக்கின்றது. இது ஏறக்குறைய ஏழுமைல் ஆழமுள்ளது.

8. கோறியாவிலுள்ள அமெரிக்க போர்வீரர் அந்நாட்டுமக்களின் கஷ்ட நிவாரணத்திற்கெனத் தங்கள்சம்பளத்திலிருந்து எவ்வளவுபணம் கொடுத்திருக்கிறார்கள்?


1 கோடியே 30 லட்சம்டலர் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பணம் அங்கே அனாதசாலைகள் ஸ்தாபிப்பதற்கும், யுத்தத்தாலே கஷ்டமடைந்தவர்களுக்கென மருந்து, உணவு, உடை ஆகியன வாங்குவதற்கும் உபயோகப்பட்டிருக்கிறது.

9. உலகின் மகாப்பெரிய முதிய மரம் எங்கே இருக்கின்றது?

அமெரிக்க ஐக்கியதேச கலிபோணியாநாட்டிலே இருக்கின்றது. அடிப்புறத்திலே இதன் சுற்றளவு $101\frac{1}{2}$ அடி. இதன்உயரம் 300 அடிக்குமேலாகும். இது 3,000 வருடங்களுக்கு முற்பட்ட ஓர் முதுமரமாகும்.

அந்தத்தலை : பிராசிரா

# தாத்தாவின் மதுவிலக்கு




**முதலாம் படத்தைப் பாருங்கள் :**

மது என்றால்—மதுபானம் என்றால் பிறந்து வளர்ந்து நரைகிழம் ஆகியும் இதுகாலவரை தாத்தா அதை ஒருநாளும் மணந்து அறியார். மருந்துக்குத் தானும் ஒருதுளி நாவில் விட்டுச் சுவை பார்த்து அறியார். பூனைப் பாத ஜோண்சனைப் போல ஓர் பொல்லாத மதுவிலக்கு அபிமானி அவர். ஆராவது குடிகாரரைத் தெருவில் கண்டாலே போதும், ஐயோ! குடி கெட்டது என்று சொல்லிக் காலிலே விழுந்து கட்டி ஓடிப் போவார். அப்படிப் பட்ட தாத்தா ஒருநாள் தெரியாமல் ஓர் தவறணைப் பக்கமாகப் போனதுதான் பாவம், மதுபானப்பேய் "இங்கே வாருங்க தாத்தா" என்று அவர் கையைப் பலவந்தமாகப் பிடித்து இழுத்தது. தாத்தா என்றால் அவரும் நியாயமான ஒரு பலசாலி. ஆகவே, மதுபானப் பேயின் பிடியிலிருந்து தன்னை விடுவித்து அதன் கை ஒன்றைத் தானே பிடித்து "நீயுமே போகவேண்டாம், வா, வா" என்று பலமாக அதனை இழுக்கின்றார். அதனால் இழுவைப் போட்டி ஒன்று மும்முரமாக நடக்கின்றது.

**இரண்டாம்படத்தைப் பாருங்கள் :**

இந்த இழுவைப் போட்டியிலே முதலில் உரத்து நின்று பிடித்த தாத்தா பிறகு பாவம், சோர்ந்து களைத்துச் சுழன்று போய் விட்டார். அதனால் மதுபானப் பேய் ஒரே இழுவையில் அவரைத் தவறணைக்குள் கொண்டு போய் நிறுத்தியது. அம்மட்டா! "பாருங்க, தாத்தா! கடும் பனி காலம்; இந்தப் பொல்லாத குளிருக்கு ஒன்று போட்டால் தான் சரிப்படும்; ஆண்டிலே ஒரு நாளைக்கு ஒரு டோஸ் போட்டால் அப்படி என்ன குடிமுழுகியா விடும்? ஐயா! கொடுங்க, தாத்தாவுக்கு ஒரு கிளாஸ்" என்று சொல்லிற்று. தாத்தாவுக்கு அரைமனம். அதை வாங்கட்டோ, விடட்டோ என்று கிளாசைப் பார்த்துக் கொண்டு ஆழமாக யோசிக்கிறார்.

**மூன்றும்படத்தைப் பாருங்கள் :**

கடைசியாகத் தாத்தா மதுபானப் பேயிடம் சரியாக மாட்டுப் பட்டுக் கொண்டார். மதி மயங்கினார். மதுபானத்துக்குத் தலை வணங்கினார். மதுபானம் விற்பவரின் காலிலேயே மெதுவாகக் குந்திக் கொண்டார். கிளாசைக் கையில் ஏந்தினார். இதிலே வாருங்கள், வாருங்கள் என்று கையை நீட்டி வாங்குகிறார். என்றாலும் புதுப் பழக்கம் அல்லவா? தாத்தாவுக்குக் கை நடுக்கம் ஏற்படுகிறது. மது வார்க்கிறவர் பிடித்து அணைக்கப் பார்க்கிறார். தனது பொறியில் தாத்தா அகப்பட்டுக் கொண்டார் என்று மதுபானப் பேய் சற்றே எட்டத்தில போய் நின்று சபாஸ், சபாஸ் என்று தாளம் போட்டு ஆனந்தக் கூத்து ஆடுகின்றது.

## சுதேச வர்த்தமானம்

### மறியல்தான் மருந்து

மாத்தளையிலே 28 வயதுடைய சரணபாலா என்னுமொருவன் களவாகக் கஞ்சாவைத்திருந்து அகப்பட்டு அங்குள்ள நீதிஸ்தலத்தில் வழக்குத் தொடரப்பட்டான். நீதிபதி அவனை விசாரணை செய்தபோது, "ஐயா, கஞ்சா இல்லாமல் நான் உயிர்வாழமுடியாது" என்று கூறிநின்றான். இந்தக் கெட்டபழக்கத்தை நீ விட்டொழிக்கும்படியாய் உனக்குத் துணைசெய்யக் கூடிய ஒரேயொருவழி — அதாவது ஒரேயொருமருந்து மறியல்தான் எனக் கூறி அவனுக்குமூன்றுமாத வெறும் மறியற்தண்டனை விதித்தனர்.

### சீமெந்தும் ஜிப்சம் மண்ணும்

காங்கேசன் துறையிலே சீமெந்துத் தொழிற்சாலை வேலைசெய்யத் தொடங்கியபிறகு அது முதன்முதலாக இலங்கையில் தயாரிக்கப்படும 'ஜிப்சம்' என்ற ஓர்விதமண்ணை இப்போது உபயோகிக்கத் தொடங்கியிருக்கிறது. சென்றஜப்பசியிலே 600 தொன் ஜிப்சம்மண்ணை அரசாங்க உப்புப்பகுதி தயாரித்துச் சீமெந்துத்தொழிற்சாலைக்கு அனுப்பியிருக்கிறது. இதனால் சீமெந்து செய்யுமசெலவிலே அரசாங்கத்துக்கு 50,000 ரூபா மிச்சமேற்பட்டிருக்கிறது. இவ்வருடத்திலே இன்னும் 1,000 தொன்மண் அனுப்பிவைக்க உப்புப்பகுதி தயாராயிருக்கிறது. உப்பிலிருந்துசெய்யப்படுவதும், சீமெந்துசெய்ய அவசியமுமான இந்த மண் இதுவரை சைப்பிறஸ்தீவிலிருந்து இறக்குமதிசெய்யப்படலாயிற்று.

### ருஷியா தொழிலாளரின் சத்துரு

லங்கா சமசமாஜகட்சியின் தலைவரான டக்றர் என். எம். பெரேரு அவர்கள் சென்றவியாழக்கிழமை இரத்தினபுரியிலுள்ள வாஸ் ஞாபகமண்டபத்தில் பேசியபோது: லங்கா சமசமாஜகட்சி பதினைந்துவருடங்களுக்குமேல தனக்குஏற்பட்ட சூறாவளிபோலும கஷ்டங்களைச் சமாளித்து மேற்கொண்டுள்ளது; இப்போது அக்கட்சி கம்யூனிஸ்தர்களால் விழுங்கடபடுவதற்கு அனுமதிக்காது; லங்கா சமசமாஜக் கட்சி கம்யூனிஸ்தகட்சியிலும் மிகப் பலம்பொருந்திய கட்சியாகும்; அதனால் அவர்களின்கையில் பகடைக்காயாக நாங்கள் இருக்கமாட்டோம்; அமெரிக்கா, அல்லது பிரித்தானியைப் போலவே கம்யூனிஸ்த ருஷியாவும் இங்குள்ள தொழிலாளர்களின் சத்துருவாதுமெனக் கூறலாயினர்.

### கண்டுபிடிக்கப்பட்ட அபின்

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த ரேகு அதிகாரிகளும், பொலிஸ் அதிகாரிகளும தங்களுக்குக்கிடைத்த தகவலின் பேரிலே வல்வெட்டித்துறையிலுள்ள ஓர் வீட்டைப் பரிசோதனைசெய்து, அங்கே 28 ருத்தல் இறக்குமதிசெய்த அபின் இருக்கக் கண்டுபிடித்தார்கள். இந்த அபின் அங்கே புகையிலை வைத்த கம் குடில் ஒன்றில் மூன்று கட்டுகளில் இருக்கக் கண்டறியப்பட்டது. இது விஷயமாய் இருவர் கைதுசெய்யப்பெற்றுப் பருத்தித்துறை நீதிஸ்தலத்தில் வழக்குத்தொடரப்பட்டார்கள். நீதிபதி இருவரையும் தலைக்கு 700 ரூபா பிணையில்விட்டு, வழக்கை இம் மாதம் 25-ந் திகதிக்குத் தவணையிட்டனர். கண்டுபிடிக்கப்பட்ட இந்த அபினின் பெறுமதி 15,000 ரூபாவென மதிப்பிடப்படுகிறது.

### ஹக்மனைத் தேர்தல்மனு

பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபைக்கு ஹக்மனைப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப் பெற்றவரான திரு. சி. ஏ. தர்மபாலா அவர்களின் தேர்தல் முறைகேடானதென்று ஆட்சேபித்துக் கம்யூனிஸ்ட்டிலைச்சேர்ந்த திரு. எம். ஜே. அப்பவர்த்தன என்பவர் சுப்பிரீங்கோட்டுக்குச் சமர்ப்பித்தமனுவானது சங். சுவான் நீதியாசரால விசாரணைசெய்யப்பெற்றுச் சென்ற சனிக்கிழமை செலவுதொகையுடன் தள்ளப்படலாயிற்று. இந்தமனு விசாரணை சுப்பிரீங்கோட்டிலே 58 தினங்களாகத் தொடர்ந்து நடைபெறலாயிற்று. நீதியரசரின் தீர்ப்பு 58 பக்கங்களை அடக்கியதாய்இருந்தது. இந்தத் தேர்தல்மனு விசாரணையாலே கம்யூனிஸ்தகட்சித் தலைவரான டக்றர் எஸ். ஏ. விக்கிரமசிங்க என்பவர் தேர்தல்சம்பந்தமான ஓர் குற்றத்தில் ஈடுபட்டதாகக் கண்டறியப்பட்டிருக்கின்றார்.




# இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனால் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிறான். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனைகப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிறான். ஏதாவது அபாயம் நேருவதானால், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிறான். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

## சிலோன் இன்ஷூரன்ஸ்

கம்பெனி லிமிட்டெட்,

தலைமை ஆபீஸ் :

69, இராணி வீதி — கொழும்பு.

**Ceylon Iusurance Co. Ltd., 69, Queen St., Collombo**


Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 12-1953